# போராட்டம்

2013 ஒக்டோபர் | இதழ் 05 | நன்கொடை 30.00 ரூபா

# வடக்கின் மக்கள் உரிமைக்காக தொடர்ந்து போராடுவோம்!

## சம உரிமை இயக்கம்

*வடக்கு மக்களின் அரசியல் கலாச்சார மற்றும் ஏனைய உரிமைகள் உள்ளிட்ட ஜனநாயக உரிமைகளை பெற்றுக் கொள்வதற்காக நடத்தப்படும் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படுமென சம உரிமை இயக்கத்தின் ரவீந்திர முதலிகே கூறினார்.*

வடக்கில் மாகாண சபை தேர்தல் நடந்தாலும், அதன் மீது தமிழ் தேசியக் கூட்டமைப்பு நம்பிக்கை வைத்திருந்தாலும் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அப்படியான ஜனநாயகமொன்றினால் பெற்றுக் கொள்ளக் கூடிய விடுதலை என்பது கிடையாதெனவும் சுட்டிக்காட்டினார்.

தேர்தல் நடந்த காலங்களில் பயனீட்டுவாத நோக்கங்களுக்காக தமிழ் தேசியவாதத்தை விலைபேசிய அவர்கள், முதல் சந்தர்ப்பத்திலேயே தமது சந்தர்ப்பவாத மற்றும் பிற்போக்குவாத தன்மையை வெளிக்காட்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்டிய முதலிகே, வடக்கின் முதலமைச்சர் யார் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டுமென முன்னர் போலியாக தீர்மானித்திருந்தாலும், இறுதியாக ஜனாதிபதியின் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தது மாத்திரமல்லாது, அவரோடு புகைப்படங்களிலும் தோற்றியதாகக் குறிப்பிட்டார்.

(தொடர்ச்சி 15ம் பக்கத்தில்)



யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்கி சொல்லொனாத் துன்பங்களை அனுபவித்த வடக்கு மக்களுக்கு சமத்துவத்தையும் சம நீதியையும் இழந்த உரிமைகளையும் பெற்றுக் கொடுக்கும் போராட்டத்தின் போது அரச அடக்குமுறை இயந்திரத்தால் காணாமலாக்கப்பட்ட குகன் முருகானந்தனின் வீட்டின் கட்டிடப்பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. அதன் கட்டிடப் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டு பூர்த்தி செய்யப்படும் கட்டத்தை நெருங்கியுள்ளது. இந்த கட்டிடப் பணிகளை பூர்த்தி செய்வதில் முன்னிலை சோசலிசக் கட்சியின் தொண்டர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். இந்த கட்டிடப்பணியை பூர்த்தி செய்வதற்கு நல்லுள்ளம் படைத்தவர்களிடமிருந்து உதவிகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**தொடர்புகளுக்கு:** Skype- ginipupura , Jude யூட்- **94714966738**

## சுகாதார சேவையாளர் மத்திய நிலைத்தின் மூலம் போராட்டம்

கனிஸ்ட சுகாதார ஊழியர்கள் எதிர்கொண்டுள்ள பல பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டும், பிளவுபட்டுக் கிடக்கும் சுகாதாரச் துறைச் தொழிற்சங்கங்களையும் ஒரே மேடைக்கு அழைத்து வந்து போராட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு சுகாதார சேவையாளமர் மத்திய நிலையம் ஏற்பாடுகளை செய்து வருகிறது. சுகாதார சேவையாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய எஞ்சிய சம்பளத்தை அரசாங்கம் மற்றும் பல மாகாண சபைகள் வழங்கத் தவறியமை, உத்தியோக உடைகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கும் விடயத்தில் காணப்படும் முறைகேடுகள் உள்ளிட்ட பல பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு சுகாதார சேவையாளர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். கோரிக்கைகளை வென்று கொள்வதற்காக பொது போராட்டமொன்றுக்கு அழைப்புவிடும் நோக்கத்தோடு அக்டோபர் 09ம் திகதி நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் பல தொழிற் சங்கங்கள் கலந்துக் கொண்டிருந்தன. சுகாதாரச் சேவையின் 27 படிநிலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களை ஒன்றிணைத்து மிக விரைவில் போராட்டத்தை நடாத்தவிருப்பதாகத் தெரிகிறது.

## கல்வியை விற்பனைப் பண்டமாக ஆக்குவதற்கு எதிராக பல்கலைக் கழகங்களில் ஆர்ப்பாட்டம்


தனியார் பல்கலைக் கழகங்களை ஆரம்பிப்பதற்கு அனுமதியளித்து வெளியிடப்பட்டுள்ள அதி விசேட வர்த்தமானி அறிவித்தலை உடனடியாக சுருட்டிக் கொள்ளுமாறு அரசாங்கத்தை வற்புறுத்தும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் பல்கலைக் கழகங்கள் பலவற்றில் இடம் பெற்றன. அதற்கேற்ப செப்டம்பர் 4ம் திகதி அழகியல் பல்கலைக் கழக மாணவர்கள் அழகியல் பல்கலைக் கழகத்தின் எதிரிலும், பேராதனை பல்கலைக் கழக மாணவர்கள் கலஹா சந்தியிலும், ரஜரட்ட பல்கலைக் கழக மாணவர்கள் மிகிந்தலை சந்தியிலும், ருகுணு பல்கலைக் கழக மாணவர்கள் அந்த பல்கலைக் கழகத்தின் எதிரிலும்: செப்டம்பர் 5ம் திகதி சப்ரகமுவ பல்கலைக் கழக மாணவர்கள் பல்கலைக் கழகத்தின் முன்பாகவும், செப்டம்பர் 11ம் திகதி களனி பல்கலைக் கழக மாணவர்கள் நடைப் பயணமாக கிரிபத்கொடை நகருக்கு வந்து, கிரிபத்கொடை நகரிலும், அக்டோபர் 3ம் திகதி வயம்ப பல்கலைக் கழக மாணவர்கள் நடைப்பயணமாக குளியாபிட்டிய நகருக்கு வந்து குளியாபிட்டிய நகரிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

தோற்கடிக்கப்பட்ட தனியார் பல்கலைக் கழக சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த அனைத்து நோக்கங்களுக்கும் இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் சட்ட அந்தஸ்து வழங்கப்பட்டிருப்பதாகவும், அரசாங்கத்தின் கொள்கையான கல்வியை தனியார்மயப்படுத்தும் கொள்கையை நிறைவேற்றிக் கொள்வதற்கு முயலும் இவ்வாறான தந்திரங்களை தோற்கடிக்க வேண்டுமெனவும் மாணவர்கள் கூறுகின்றனர்.

கல்வியை தனியார்மயமாக்கும் நவ தாராளமய உபாயத்தை தோற்கடிப்பதற்காக தலையீடு செய்யவிருப்பதாகவும் புரட்சிகர மாணவர் இயக்கம் கூறுகிறது.



சிரிப்பு - கண்ணீர் 3



7 பட்டதாரி பயிலுனர்களும்



5 அறிவு என்பது என்ன?

# விரிவான இடதுசாரிய கருத்தாடலுக்கு இடதுசாரிய பொது மேடை

## முன்னிலை சோசலிஸ கட்சி

நவ தாராளமய முதலாளித்துவத்திற்குள் தற்போதைய சமூகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் மனித சிந்தனையின் மாற்றங்களுக்குச் சமமாக இடதுசாரி இயக்கத்திற்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடாத்துவதற்கும் உலக ரீதியிலான அறிவு மட்டத்தில் தோன்றியுள்ள தத்துவார்த்த போக்குகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கும் வழக்காற்று ரீதியில் இடதுசாரி இயக்கத்தை குணாதிசயங்கள் நிறைந்ததாக உயர்த்தி வைப்பதற்கான வேலைத் திட்டமொன்று கட்சியினால் தயாரிக்கப்பட்டுள்ளதாக முன்னிலை சோசலிசக் கட்சியின் ஒரு முக்கியஸ்தர் கூறினார்.


அதன் கீழ் நாட்டின் அனைத்த இடதுசாரிய கட்சிகள், இடதுசாரியக் குழுக்கள் மற்றும் இடதுசாரிய செயற்பாட்டாளர்களை ஒன்றிணைத்த பொது மேடையொன்றை அமைப்பது தொடர்பில் முன்னிலை சோசலிஸக் கட்சி திட்டமிருக்கிறது.

அதற்காக அந்தந்த கட்சிகளின் செயற்பாட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த பொது மேடையிலான கருத்தாடல் நடவடிக்கைகள் நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

இடதுசாரிய அரசியலின் பல்வேறு பக்கங்கள் குறித்து தற்போது கட்சிக்குள் மேற்கொள்ளப்பட்டுவரும் கருத்தாடல்களை வர்க்கத்தின்பால் கொண்டு செல்வதற்கான முதற்படியாக இந்த பொது மேடையை பயன்படுத்த முன்னிலை சோசலிஸக் கட்சி எதிர்பார்க்கின்றது. இது விடயமாக இடதுசாரிய இயக்கங்களிலிருந்து நல்ல வரவேற்பு கிடைத்திருக்கின்றது.

இது குறித்து மேலும் விளக்கமளித்த கட்சியின் முக்கியஸ்தர், ஷ தற்போதைய சந்தர்ப்பத்தில் முதலாளித்துவத்திற்குள் தோன்றியுள்ள இக்கட்டான நிலைமை காரணமாக இடதுசாரியத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள தத்துவார்த்த சவால்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட சக்திகளோடு இணைப்பது குறித்து கலந்துரையாடல்கள் கட்சியின் அமைப்பு ரீதியிலான எல்லைகளுக்குள் முடக்கிவிடாது அதனை வர்க்கத்திடம் கொண்டு செல்ல வேண்டும். கருத்தாடல் குறித்து ஆரம்ப கலந்துரையாடல் இம்மாதம் நடைபெறவிருப்பதாகக்' கூறினார்.

# போலீஸ்காரன் வேலை வேண்டாமாம்!!



சில வலிய நாடுகள், நலிவடைந்த நாடுகள் மீது பொலீஸ்காரன் போல் செயற்படுகின்றனவென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஐ.நா.சபைக் கூட்டத்தில் கவலை அடைந்துள்ளார்.

ஜனாதிபதியின் பேச்சின் பெரும்பொருள் வலியோர்கள் எளியோர்களை அடக்கி-ஒடுக்க முற்படக்கூடாது என்பதுதானே? இத் தர்மகர்த்தரின் பேச்சுக்கும் செயலுக்கும் உள்ள நடைமுறை எவ்வளவு தூரம் கொண்டது.

ஆணைப் பெண்ணாக, பெண்ணை ஆணாக, மாற்றமுடியாத என்ற ஒன்றைத் தவிர, மற்றெல்லா சர்வவல்லமைகளையும், தன்னகத்தே கொண்டவர்தான் எம் ஜனாதிபதி. இவர் சகல நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்டதொரு வலிய முடிசூடா மன்னனாகியதன் மூலம், எம்நாட்டு மக்களை எப்படியெல்லாம் நலிவடையச் செய்துள்ளார்.

அரசியல் பொருளாதாரத்தில், இன-அடக்கு முறையில், ஜனநாயக விரோதத்தில், பேச்சு-எழுத்து பத்திரிகைச் சுதந்திரத்தில், பத்திரிகையாளரைக் கடத்தலில்-இல்லாதாக்குவதில் இன்னும் இன்னோரன்னதில் இவர் வலியவரா? எளியவரா?

இவையெல்லாம் ஊருக்கான உபதேசம்தான் எனக்கில்லையடி என்பதுதான் மகிந்த சிந்தனை. ஆனால் சமூக-விஞ்ஞான நோக்கில் வலிய-வர்க்கங்கள் யாவும் தம் கீழ் நலிவடைந்துள்ள எல்லா வர்க்கங்களையும் கூறுபோட்டு, அடக்கி ஒடுக்குகின்றன. இதுவே சமகால நவதாராளவாதத்தின் எதார்த்தமாகும்.

# கொழும்பில் ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை

பொதுநலவாய நாடுகளைின் மாநாட்டை இலக்காக வைத்து கொழும்பு நகரில் இரு வாரத்திற்கு எவ்வித ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொள்ள தடைவிதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இது குறித்து பாதுகாப்பு அமைச்சின் சட்ட ஆலோசகர் ஹரிகுப்தா ரோஹனாதீர பத்திரிகைகளுக்குக் கூறியிருந்ததாகத் தெரிகிறது. இதன் மூலம் கொழும்பு நகரத்திற்குள் ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் பதாகைகளை காட்சிப்படுத்தல் போன்றவற்றிற்கு தடை விதிக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

உலகின் ஏனைய நாடுகளில் சர்வதேச மாநாடுகள் நடக்கும் சந்தர்ப்பங்களில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட மக்களுக்கு உரிமை இருக்கிறது. உலகம் பூராவும் இப்படியான ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன. இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள இந்த நடவடிக்கை மனித உரிமைகளை மீறுவதாகுமென மனித உரிமை அமைப்புக்கள் கூறுகின்றன.

இது சம்பந்தமாக 2013.10.11ம் திகதி ஊடக சந்திப்பொன்றை நடத்திய தேசிய பாதுகாப்பு தொடர்ப்பிலான ஊடக நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன ஹுலுகல்ல கூறியதாவது, மாநாடு காலத்தில் ஆரப்பாட்டங்களும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் நடத்த தடை விதிக்கப்பட நேரிடும் எனக் கூறினார்.

# 2 லட்சம் பங்களாதேச ஆடைத் தொழிலாளர்களின் போராட்டங்கள் சொல்லும் செய்தி...!




மேற்குப் பன்னாட்டு அங்காடிகளினதும், கண்கவரும் உயர்தர அழகுசாதன அங்காடிகளினதும் மடியில் கையை வைத்திருக்கின்றது, தங்கள் உழைப்பை சூறையாடியவர்களுக்கு எதிரான தொழிலாளர்களின் போராட்டம். 22 செப்டம்பர் முதல் பங்களாதேச ஆடைத் தொழிலாளர்கள் தொடர் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். பொலிஸார் தடியடியையும், கண்ணீர் புகைக் குண்டு வீச்சையும், துப்பாக்கிச் சூட்டையும் தொழிலாளர்களுக்கு எதிராக நடத்திய நிலையில், தொழிலாளர்கள் இதற்கு எதிராக வீதிகளில் தடைகளை ஏற்படுத்தியும், ஆடைத் தொழிற்சாலைகளுக்கு தீ வைத்தும் பதிலடி கொடுக்கின்றனர்.

உலகில் மிகக் குறைந்த கூலியை அடிப்படையாகக் கொண்டது பங்களாதேச ஆடைச் தொழிற்சாலைகள். மாதம் 3000 தக்கா (5900 ரூபா) என்ற குறைந்த கூலியில், 40 லட்சம் தொழிலாளர்கள் சுரண்டப்படுகின்றனர். 4500 ஆடைத் தொழிற்சாலைகளைக் கொண்டதும், வருடாந்தம் 27000 மில்லியன் டொலர் (5,711,684 மில்லியன் ரூபா) ஏற்றுமதியை கொண்டதும் இந்த ஆடை உற்பத்தித்துறையாகும்.




தங்கள் கூலியை 2.5 மடங்கால் அதிகரிக்கக் கோரியும், தங்கள் வேலைத் தரத்தினை மேம்படுத்தக் கோரியும் தொடங்கிய போராட்டத்தை அடுத்து 500 தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளது.

குழந்தைகள் உட்பட அதிகளவில் பெண்கள் ஈடுபடுத்தப்படும் இத்துறையில், இரசாயன கலவைகளுக்குள் துணிகள் மட்டுமல்லாமல் தொழிலாளர்கள் கூட தோய்த்தெடுக்கப்படுகின்றனர். உலகில் தடைசெய்யப்பட்ட இரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்படும் அதே நேரம், அவை சுற்றுச்சூழலில் விடப்படுவதால் சூழல் நஞ்சாகின்றது. தொழில் சார்ந்து இரசாயன பாதிப்புக்கு உள்ளாகும் தொழிலாளர்கள் வேலையை இழப்பதுடன், சூழல் மற்றும் தொழில் சார்ந்து நோய்க்குள்ளாகி உயிருடன் கொல்லப்படுவதும் அரங்கேறுகின்றது. இது போன்று மேற்குலகின் மலிவான நுகர்வுக்கும், அதிக சூறையாடலுக்கும் சந்தையினை பகட்டாக மினுமினுக்கி நிற்கும் அழகு சாதனப் பன்னாட்டு கம்பனிகளின் நலன்களுக்காக தொழிலாளர்கள் பலியிடப்படுகின்றனர். பன்னாட்டு சூறையாடலுக்கும், உள்நாட்டு தரகு முதலாளிகளின் சுரண்டலுக்கும், உள்ளாகும் பங்களாதேச மக்களின் தொடர் போராட்டங்கள் அடுத்தடுத்து தென்னாசியாவிலும் எழுந்து வருகின்றது.

# சிரிப்பு-கண்ணீர் மற்றும் செயற்படுதல்

மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல்களும் முடிந்துவிட்டன. தேர்தலின் சூடு தணிந்து தேர்தல் முடிவுகள் குறித்து வாத விவாதங்களும் ஓய்ந்து விட்டுள்ளன. என்றாலும் நாங்கள் தொடர்ந்தும் தேர்தலைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறோம். மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்கான தேர்தலில் 60 வீதமான வாக்குகளைப் பெற்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றுள்ளது. வடக்கு மாகாண சபைத் தேர்தலில் 80 வீதமான வாக்குகளைப் பெற்று மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களையும் பெற்று வடமாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது. இதில் இந்தத் தேர்தல் மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கக் கூடியதாக இருக்கப்போவதில்லை. மேட்டுக்குடி கனவான்கள் தங்களது அதிகாரத்தைக் காட்டுகின்ற ஒரு நிறுவனமாகவே இருக்கும். அடுத்ததாக, இந்தத் தேர்தல் பிரச்சாரப் பக்கம் திரும்பிப் பார்த்தால் இனத்துவேசத்தைக் கக்கிய பிரச்சாரமாகவே இவை இருந்தது. ஆகவே ஒடுக்கப்பட்ட மக்கள் மேலும் மேலும் பிரிக்கப்படமாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதம் கிடையாது.

**இனவாதமும் நவ தாராளமயவாதமும்**

தேர்தல் முடிவுகளைப் பார்க்கும்போது "நாங்கள் சிங்களவர்கள்" - "நாங்கள் தமிழர்கள்" - "நாங்கள் முஸ்லிம்கள்" என்ற வகையில் சிந்தித்தே பெரும்பாலான மக்கள் வாக்களித்திருப்பது தெரிகின்றது. இனத் துவேசத்தைக் கொண்டு தனது தேர்தல் பிரச்சாரத்தை முன்னெடுத்த ஐ.ம.சு.முன்னணி, தமிழர் தேசியக் கூட்டமைப்பு வடக்கிற்கு சுயாட்சியொன்றைக் கேட்பதாகவும், அங்கு எல்.டீ.டீ.ஈ. மீண்டும் தலை தூக்குவதாகவும் தென்பகுதி மக்களுக்கு துவேசத்தை ஊட்டி நாட்டைப் பிரிப்பதற்கு எதிராக தமக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டது. சிங்கள மக்கள் பெரும்பாலாக வசிக்கும் இடங்களில் இந்தப் பிரச்சாரத்திற்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. அதனால் மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களை அரசாங்கம் கைப்பற்றிக் கொண்டது. தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் தமிழ்க் கனவான்களின் இனத் துவேசப் பேச்சுக்கள் பிரச்சார மேடைகளில் முழங்கப்பட்டன. வடமாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி கொண்டது. இதைத் தவிர மலையகத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வேட்பாளர்களும், முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களும் வெற்றி பெற்றுள்ளனர். சிங்கள இனவாதத்தையும், யுத்த மனோபாவத்தையும் கொண்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி இந்தத் தேர்தலின் மூலம் 3வது சக்தியாக வளர்ந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி 2009இல் 22 ஆசனங்களை பெற்றிருந்தது. இம்முறை அதற்கு 16 ஆசனங்களே கிடைத்தன. வடமேல் மாகாணத்தில் ஐ.தே.க. பெற்றிருந்த 14 ஆசனங்களுக்குப் பதிலாக இம்முறை 12 ஆசனங்களையே பெற்றுள்ளது. ஆனால், வட மாகாணத்தில் ஒரு ஆசனத்தைக் கூட அதனால் பெறமுடியவில்லை. மக்கள் விடுதலை முன்னணி மூன்றாவது இடத்திலிருந்த பட்டியலில் கடைசிக்குத் தள்ளப்பட்டுள்ளது. இனவாதம் வென்றதாகத்தான் தேர்தல் முடிவுகள் கூறுகின்றன. இது எதிர்கால ஆபத்துக் குறித்த ஒரு முன்னறிவித்தலாகும்.

வெற்றி பெற்றிருப்பது வெறுமனே இனவாதம் மட்டுமல்ல. மேட்டுக்குடி கனவான்களின் அடாவடி அரசியலும் வெற்றி பெற்றிருக்கின்றது. அரசாங்கத்தின் உபாய மார்க்கமான இனவாதத்திற்கும் மதவாதத்திற்கும் கிடைத்த வெற்றியாகவே இது உள்ளது. எவ்வாறாயினும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற உபாய மார்க்கமாகவே அரசாங்கம் இனவாதத்ததைப் பயன்படுத்துகிறது. சமயோகிதமாக அதனை முன்னெடுப்பதோடு, தேவையானபோது அதனைப் பின்தள்ளவும் செய்கிறது. கடந்த காலத்தில் தலை தூக்கியிருந்த முஸ்லிம் மக்கள் மீதான எதிர்ப்பின்போது, அரசாங்கம் நடந்துகொண்ட விதம் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இம்முறை தேர்தலின்போது பொதுவாக சிங்கள மக்கள் மத்தியில் இனவாதம் வெற்றி பெற்றிருந்தாலுங்கூட, அடிப்படைவாதக் குழுக்கள் தோல்வியடைந்துள்ளன. கண்டி, நுவரேலியா, மாத்தளை, குருநாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் தேசிய சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிட்ட 5 வேட்பாளர்களும் தோல்வியடைந்துள்ளனர். தேசிய ஹெல உருமய கட்சியின் சார்பில் மாத்தளை மற்றும் புத்தளம் மாவட்டத்தில் போட்டியிட்ட இரு வேட்பாளர்களும் தோல்வியடைந்துள்ளனர். சிங்கள இனவாதத்திற்கு வாக்குகள் கிடைக்கவில்லை. வாக்குகள் கிடைக்காவிட்டாலும் சித்தாந்தக் கண்ணோட்டம் அதன் மீதுதான் இருக்கின்றது. சாராயம், பிரைட்றைஸ் அன்னதானம், சேலைகள், மண்வெட்டிகள், மொபைல் தொலைபேசிகள் போன்ற பலவற்றை இலஞ்சமாகக் கொடுத்த வஞ்சகர்களே இம்முறை தேர்தலில் வென்றுள்ளனர். கையை நீட்டி தாராளமாக செலவளித்த பிரதமரின் மகன் அனுராத ஜயரத்ன சரத் ஏகநாயகாவை விட பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுள்ளார். மாத்தளையில் பிரமித பண்டார தென்னக்கோன் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார். குருநாகல் மாவட்டத்தில் கட்சி தாவிய தயாசிறியும் அதிகமதிகமாக செலவளித்த ஜொஹ்ஹான் பர்னாந்துவும் வெற்றி பெற்றுள்ளார்கள். சுருக்கமாகச் சொல்வதாயிருந்தால் உண்டு களித்து உல்லாசம் அனுபவிக்கும் கனவான் அரசியலே வென்றுள்ளது. அதுவும் இனவாதத்திற்கு அடிபணிந்தே. இனவாதத்தை ஏற்றுக் கொள்ளும் வஞ்சகர்களே தேர்தலில் வென்றுள்ளனர். நவதாராளமயத்தை ஏற்றுக் கொள்ளாத, இனவாதத்தையும், இனவாதிகளையும் ஏற்றுக் கொள்ளாத நவதாராளமய முதலாளியவாதிகளுக்கு இடமில்லை. நவதாராளமய முதலாளித்துவத்தினதும், இனவாதத்தினதும் காடைத்தன - கனவான்தன - வஞ்சக முகங்களுக்கே ஆதிக்கம் செலுத்தும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. இலங்கையின் ஆட்சிக் கோட்பாடு இதுதான். இம்முறை தேர்தலிலும் இதுதான் வெற்றி பெற்றுள்ளது.

**வடக்கும் இனவாதமும்**

மேலோட்டமாகப் பார்க்கும்போது அரசாங்கம் வடக்கில் தோல்வி அடைந்திருப்பதாகவே தெரிகிறது. அரசாங்கத்தின் எதிர்கால வெற்றிகளுக்கான அடித்தளம் வடக்கில் இடப்பட்டுள்ளதாக அரசாங்க அமைச்சர்கள் கூறுகிறார்கள். தான் எந்த விதமான தோல்வியைச் சந்தித்தாலும் வெற்றி பெற்றதாகக் கூறும் மக்கள் விடுதலை முன்னணியின் கூற்றோடு அவர்களது கூற்றை ஒப்பிட முடியாது. வடக்கின் தேர்தல் முடிவுகளும், அது அரசாங்கத்தை பாதிக்கும் விதத்தையும் குறித்து இதனைவிட ஆழமாக சிந்திக்க வேண்டும். வடக்கிலுள்ள கற்பனை எதிரியைக் காட்டியே அரசாங்கம் இம்முறை தென்பகுதி தேர்தல்களுக்கு முகம் கொடுத்தது. அந்த எதிரிதான் தமிழர் தேசிய கூட்டமைப்பு. இலங்கையின் ஆட்சியாளர்கள் கடந்த 30 வருடங்களாக வடக்கின் பிரபாகரனைக் காட்டி தெற்கின் ஒடுக்கப்பட்ட மக்களை வென்றனர். பிரபாகரன் கொல்லப்பட்டு 4 வருடங்கள் கடந்த பின்னரும் பிரபாகரனின் மறுபிறவி பற்றிய பீதியே இலங்கையின் முதலாளித்துவ அரசியலாக இருக்கின்றது. என்றாலும் அது நீண்ட காலத்திற்கு செல்லுபடியாகாது. இருந்தபோதும் அரசாங்கத்தை சில காலத்திற்கு இழுத்துச் செல்லக்கூடிய ஒரு என்ஜின் இப்போது கிடைத்துள்ளது. தெற்கின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வடக்கின் விக்னேஸ்வரனைக் காட்டி சிறிது காலம் அரசாங்கத்தை ஓட்ட முடியும். இதன் மூலம் அனைத்துவித ஒடுக்குமுறைகளையும் மறக்கடிக்க முடியும். எல்.டீ.டீ.ஈ.க்கு எதிரான யுத்தத்திற்குப் பதிலாக வடக்கு மாகாண சபைக்கு எதிரான யுத்தத்திற்கு தென்பகுதி மக்களை வழிநடத்த முடியும். ஆகவே, நீண்டகால வெற்றிக்கான பயணத்திற்கு அடிப்படையொன்று இருப்பதாக அரசாங்கம் கூறுவதில் அர்த்தமொன்று இருக்கிறது.

எதிர்வரும் வருடங்களில் நடக்கவிருக்கும் அரசியல் எப்படி இருக்கப்போகின்றது என்பதை 23ம் திகதிய (முழுத் திகதி, மாதம் ஆண்டு உட்பட வேண்டும்) திவய்ன' சிங்களப் பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கத்தைப் பார்த்தால் அனுமானித்துக் கொள்ள முடியும். அடுத்ததாக அரசாங்கத்திற்கு வரவிருக்கும் ஆபத்தைப் பற்றி யோசிக்கும் போது, தமிழ் டயஸ்போராவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் சிறந்த தெரிவாக இருக்கிறது. உருத்திரகுமாரனை விட விக்னேஸ்வரனிடத்தில் இருந்து வரும் ஆபத்து குறைவானதாகவே இருக்கும். யுத்தக் குற்றச்சாட்டுகளை நிரூபித்தல், மேற்கத்தைய நாடுகளை இலங்கைக்கு எதிராக தூண்டிவிடுதல், முடியுமானால் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்க அந்த நாடுகளை தூண்டிவிடுதல் போன்ற நடவடிக்கைகளில் தமிழ் டயஸ்போரா முனையக்கூடும். அந்த அரசியல் ஆபத்தைத் தவிர அரசாங்கத்திற்கு வேறு தனிப்பட்ட ஆபத்துக்களும் இருக்கின்றன. அது பலிவாங்குதற்கு உள்ள மனோபாவமாகும். இவ்வாறான மனோபாவம் இந்த டயஸ்போராவுக்கு இருக்கின்றது. தேர்தல் முடிவுகளோடு தமிழ் மக்களின் தலைமை டயஸ்போராவிடமிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கைகளுக்குச் சென்றுள்ளது. அதாவது விக்னேஸ்வரன்களிடம் சென்றுள்ளது. முன்னர் கூறியதைப்போன்று அவர்களால் அரசாங்கத்திற்கு ஆபத்துக்களோ, தனிப்பட்ட ரீதியிலான ஆபத்துக்களோ கிடையாது. சம்பந்தன் - விக்னேஸ்வரன் போன்றவர்கள் மாத்திரமல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள கடும்போக்காளராகக் கருதப்படும் சுமந்திரன் கூட அமிர்தலிங்கம் போன்றவர்களின் அரசியலோடு நெருங்க முடியாது. அமிர்தலிங்கம் இனவாதியாக இருந்தது மட்டுமல்லாது எல்.டீ.டீ.ஈ. போன்ற ஆயுதக் குழுக்களின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாகவும் இருந்தார். கடந்த ஞாயிறு அன்று இவர்கள் நடத்திய ஊடக சந்திப்பின் போது வெளியிட்ட கருத்துக்கள் த.தே.கூட்டமைப்பின் அரசியலுக்குச் சிறந்த உதாரணமாகும். சட்டத்திற்குப் புறம்பாக எதுகுமே நடக்காது, அரசாங்கத்தோடு கலந்துபேசி மாகாண சபைகளுக்கான அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள ஆவன செய்யப்படும் என்பதாகவே விக்னேஸ்வரனுடைய கருத்தாக இருந்தது. அவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான உறவுகள் தமிழ் டயஸ்போராவைப் போன்று பழிவாங்கும் - பலிவாங்கும் நோக்கத்துடனானதல்ல. சட்ட விடயங்கள் மற்றும் உத்தியோகபூர்வ கொடுக்கல் வாங்கல் பிரச்சினையாகும். நவ தாராளமய முதலாளித்துவத்திற்கு உடன்பட்டு, வடக்கிற்கு மூலதனம் செல்லும் போது அதன் பெரும் பகுதி தமக்குச் சேரவேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிறகு தர்க்கிக்கும். இதற்காக இந்தியா மற்றும் ஐக்கிய நாடுகள் சபை போன்றவற்றைப் பயன்படுத்தும். அரசியலாகும ˙. இதன் வடிவத்தை



(தொடர்ச்சி 15ம் பக்கத்தில்)



# வடக்கு தேர்தல் மூலம் தமிழ் மக்கள் தோற்கடிக்கப்பட்டனர்

அரசு தோற்றதால் தமிழ் மக்கள் வென்றதாகக் கருதுகின்ற அரசியல் முட்டாள்தனமும், தமிழன் என்ற உணர்வே அரசைத் தோற்கடித்ததான அரசியல் பிதற்றல்களும், தேர்தலின் பின்னான மக்கள் விரோத அரசியலாகின்றது.

இந்த வகையில்,

1.தமிழனின் இனவுணர்வோ, மனச்சாட்சியோ தேர்தல் முடிவைத் தீர்மானிக்கவில்லை. மாறாக தமிழ் மக்களின் இன்றைய சமூக வாழ்க்கையே தேர்தல் முடிவைத் தீர்மானித்தது. இதற்கு மாறான வேறுபட்ட ஒரு சூழலில், தேர்தல் முடிவுகள் வேறுவிதமாக இருந்திருக்கும். இதுதான் உண்மை.

வடக்கில் அரசு நடத்திய தேர்தல், தேர்தல் நடத்தைகள், பேரினவாத ஒடுக்குமுறையாக மாறி, மக்களை அச்சுறுத்திய ஒரு சூழலிலேயே தேர்தல் நடந்தேறியது. வாக்குப் போடுவதற்கு கூட அச்சம் நிலவிய சூழலிலேயே, மக்கள் அரசைத் தோற்கடித்தனர்.

இதுபோல் 2009இல் புலிகளை மக்கள் தோற்கடித்தபோது, முள்ளிவாய்க்காலில் எப்படி அரசு வெற்றி பெற்றதோ, அதேபோல் மக்கள் தேர்தலில் அரசைத் தோற்கடிக்க கூட்டமைப்பு வெற்றி பெற்றது. தோற்றவர்களதும், வென்றவர்களதும் கதை இதுதான்.

2.தேர்தலில் அரசைத் தோற்கடித்த மக்கள், மீண்டும் தோற்றுப் போனார்கள். 2009இல் புலியை தோற்கடித்தபோதும், மக்கள் வெற்றி பெறவில்லை. மாறாக தோற்றுப் போனார்கள். அன்றுபோல் மீண்டும் ஒருமுறை நடந்திருக்கின்றது.

அரசு தேர்தலில் தோற்றதன் மூலம், வெற்றி பெற்றிருக்கின்றது. இதுதான் "ஜனநாயகம்" என்று மக்களைத் தோற்கடிக்கவும், வடக்கில் "ஜனநாயகம்" நிலவுவதாகக் கூறி உலகை ஏமாற்றுவதன் மூலம், இந்தத் தேர்தற்தோல்வி மூலம் வெல்லவும் முடிந்திருக்கின்றது. அரசைத் தோற்கடித்ததன் மூலம், மக்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை என்ற உண்மையில், மீண்டும் ஒருமுறை மக்கள் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றனர்.

வடக்கின் உண்மையான நிலவரம் என்ன? வடக்கில் வாக்குப்போட அனுமதித்தவர்கள், அரசியலைப் பேச அனுமதிக்கவில்லை. திறந்தவெளிச் சிறையில் ஊமைகளைக் கொண்டு, தனக்கு எதிராக வாக்குப் போட வைத்ததன் மூலம் மக்களை தோற்கடித்திருக்கின்றனர். அரசு - கூட்டமைப்பும் கூட்டாகவே மக்களின் கருத்து - எழுத்து - பேச்சுச் சுதந்திரத்தை மறுத்து, வாக்குப் போடுவதையே ஜனநாயகமாகக் காட்டி ஏமாற்றியதன் மூலம் தோற்கடித்தனர்.

இந்தத் தேர்தல் மூலம் மக்களின் தோல்வி என்பது,

1. இதுதான் மக்களின் ஜனநாயக உரிமை, சுதந்திரமான மக்கள் தெரிவு என்று நம்பவைத்து, மக்களின் கழுத்தை அறுத்து இருக்கின்றனர். வடக்கில் ஜனநாயகமும் சுதந்திரமும் நிலவுவதாக, அரசு உரத்துக் கூறத் தொடங்கி இருக்கின்றது.

2. தமிழன் என்ற இன அடையாள உணர்வை முன்னிறுத்தி, அதையே தேர்தல் வெற்றியாகக் காட்டுவதன் மூலம், தமிழனின் சமூக வாழ்க்கையிலான எதார்த்தத்தை மறுத்துவிடுவதன் மூலம் மக்களைத் தோற்கடித்து இருக்கின்றனர்.

3. தமிழன் என்ற உணர்வை முன்னிறுத்தி இனவாதமாக்குவதன் மூலம், சுயநிர்ணய உரிமையை இந்தத் தேர்தல் மூலம் மறுத்து விடுவதால், மக்களை தோற்கடித்துள்ளனர்.

4. தேசத்தையும் மக்களையும் நவதாராளமயமாதல் மூலம் அன்னியருக்கு விற்றுவந்தது அரசு. இனி தமிழனின் பெயரில் விற்கும் அரசியல் பாத்திரத்தைக் கூட்டமைப்பு ஏற்றதன் மூலம், தமிழ் மக்களைத் தோற்கடித்து மக்களின் முதுகில் குத்துவதை அரசியலாக தொடங்கியுள்ளது.

தமிழ் மக்கள் குறைந்தது இந்த நான்கு வடிவங்களில் தோற்கடிக்கப்பட்டு இருக்கின்றனர்.

**தேர்தல் அறிவிக்கப்பட்ட நாட்கள் முதல் சட்டவிரோதமான செயற்பாடுகளையும், வன்முறைகளையும், வழமையை விட அதிகளவில் மக்கள் மீது ஏவிவிட்டனர். சிவில் சமூக கட்டமைப்பை முறைகேடாகவும், இராணுவ கட்டமைப்பைக் கொண்டு அடக்குமுறைகளை ஏவியதன் மூலம், மக்களை மிரட்டித் தமக்கு வாக்குப் போடக் கோரினர்.**

தமிழ் மக்களின் இந்தத் தோல்வியே, அரசினதும் கூட்டமைப்பினதும் வெற்றியாகும். வன்னியில் ஓட்டைக் குடிசையே அபிவிருத்தி அரசியலாகவும். வடக்கில் சிந்திக்கவும், செயற்படவும் முடியாது ஊமையாகவும், நடைப்பிணமாகவும் வாழ்தல் என்பது ஜனநாயகமாகி இருக்கின்றது. வாய்பொத்தி மவுனியாகவும், அரசியல் எடுபிடியாகவும் இருத்தல், சமூக வாழ்க்கையாகிவிட்ட எதார்த்தமே, வடகிழக்கின் பொதுவான வெட்டுமுகம். இந்தக் கேலிக்குரிய பாசிசத்தை "ஜனநாயகமாக" அங்கீகரிக்கக் கோரியதே தேர்தல் கூத்தாக நடந்தேறியது.

"ஜனநாயகம்" என்பது வாக்குப் போடுவதும், அதற்கான சூழலும் தான் என்ற எல்லைக்குள், மக்களை மந்தையாக்கியது இந்தத் தேர்தல். வடக்கில் "ஜனநாயகம்" நிலவுவதாகவும், மக்கள் "சுதந்திரமாக" தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதாகவும் உலகமெங்கும் கூறுமளவுக்கு தேர்தலும், தேர்தல் முறையும் மக்களை முட்டாளாக்கி மோசடி செய்தது. வடக்கில் வாழும் மக்களின் எதார்த்தம் என்பது, ஜனநாயகமும் சுதந்திரமும் மறுக்கப்பட்ட, திறந்தவெளிச் சிறையில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட அச்சத்துடன் கூடிய வாழ்வு தான் வாழ்க்கையாக இருக்கின்றது.

இந்த உண்மையை மறுக்கும் வண்ணம், வடக்கில் ஜனநாயகம் நிலவுவதாகவும், மக்கள் சுதந்திரமாக தேர்ந்தெடுத்து இருப்பதாகவும், இந்தத் தேர்தல் முடிவை ஏற்று ஐ.நாவில் ஜனாதிபதியே கூறுமளவுக்குத் தேர்தல் முறையே பாசிசமாகி இருக்கின்றது. இந்த வகையில் ஜனாதிபதி ஐ.நாவில் "வடபகுதி மக்களுக்கு சுமார் 25 ஆண்டுகளுக்குப் பின்னர் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது, மக்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்." என்கின்றார். இந்த தேர்தல் மூலம் மிகக் கேவலமாக, தமிழ் மக்களைத் தோற்கடித்ததுடன், அவர்களை இழிவாட முடிந்திருக்கின்றது என்பதை இந்தக் கூற்று எடுத்துக் காட்டுகின்றது.

தமிழ் மக்களை கொத்துக் கொத்தாக கொன்றவர்கள், போராடும் சிங்கள மக்களை கொல்லவும் தயங்காதவர்கள், தேர்தல் முடிவுகளைக் காட்டி அதனை வடக்கு மக்களின் சுதந்திரமான ஜனநாயகத் தெரிவாகக் காட்ட முற்பட்டுள்ளனர். தேர்தல் மூலம் தங்கள் பாசிச முகத்தை மூடிமறைப்பதில், குறிப்பாக இன்று அரசு வெற்றி பெற்று இருக்கின்றது.

தமிழ் மக்கள் அரசைத் தோற்கடிக்க, அரசு தமிழ் மக்களை தேர்தல் முறை மூலம் தோற்கடித்து இருக்கின்றது. "காகம் இருக்கப் பனம் பழம் வீழ்ந்த கதையாக" கூட்டமைப்பு இதைத் தங்கள் வெற்றியாக பீற்றிக் கொள்கின்ற அளவுக்கு, தமிழ் மக்களை தம் பங்குக்கு தோற்கடித்து இருக்கின்றனர்.

வடக்குத் தேர்தலும், தேர்தல் முடிவுகளும், தமிழ் மக்களின் தோல்வியாகும். ஜனநாயக விரோத அரசு இதைத் தனது வெற்றியாக உலகுக்கு காட்ட, இனவாதிகளான கூட்டமைப்பு இதைத் தனது வெற்றியாக பீற்றிக்கொள்வதும் மக்கள் விரோத அரசியலாகி இருக்கின்றது.

இனவாதமும் இனவொடுக்குமுறையுமே தேர்தலானது இலங்கை தளுவிய அளவில் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்ட தேர்தல்களும், தேர்தல் முடிவுகளும் வெளியாகி இருக்கின்றது. இப்படி இலங்கையில் இனவாதம் ஜனநாயகமாகி இருக்கின்றது. இது வடக்கில் இனவாதத்துக்கு மேலதிகமாக இனவொடுக்கு முறையே தேர்தலாக அரங்கேற்றியது. இந்த வகையில் மகிந்த சிந்தனையிலான வடக்கு "வசந்தம்" தேர்தலாக தலைவிரித்தாடியது.

சட்டவிரோதமாக ஒரு பத்திரிகையை அதே போன்று பொய்யாக அடித்து வெளியிடுமளவுக்கும், வேட்பாளர்களின் வீடு புகுந்து இராணுவம் தாக்குமளவுக்கும் தேர்தல் "ஜனநாயகம்" பூத்துக் குலுங்கியது. துப்பாக்கிச் சூடுகள் தொடங்கி கொலைகார புலனாய்வாளர்கள் பவனிவர, தேர்தல் மக்கள் மேல் திணிக்கப்பட்டது. வாக்குப் போடமுடியாத அளவுக்கு அச்சமும், பீதியும் விதைக்கப்பட்ட நிலையில், தேர்தல் அறுவடைக்குத் தயாரானார்கள். புலிகள் மக்களை அச்சுறுத்தித் தம்முடன் வைத்திருந்தது போல், தமக்கு வாக்குப் போடுமாறு மக்களை அரசு மிரட்டியது. மக்கள் தம்முடன் இருப்பதாகவே, புலிகளைப் போல் அரசும் நம்பியது. மக்களின் ஊமைத்தனத்துடன் கூடிய அச்சத்தையே, தங்கள் அரசியல் வெற்றியாகக் கனவு கண்டனர்.

இதற்கு முன் இன்னுமொரு முகம் இருந்தது. தான் கையாண்ட தொடர்ச்சியான இனவொடுக்கு முறையால் மக்களைக் கண்டு அரசு அஞ்சியது. இதனால் மாகாண சபைத் தேர்தலை வடக்கு மக்களுக்கு பல வருடங்களாக மறுத்து வந்தது. சர்வதேச அழுத்தங்களினால் தான் வடக்கில் தேர்தலையே நடத்த முன்வந்தது. அதற்கு முன்பாகவே 13வது திருத்தச் சட்டத்தை வெட்டிச் சுருக்கியவர்கள்,

அதேநேரம், தான் சீராட்டி வளர்க்கும் இன மத உதிரிக் கும்பல்களைக் கொண்டு, வடக்கு தேர்தலை எதிர்த்து "புலிப்" பிரச்சாரத்தை முன்னெடுத்தது. அரசின் கூலிப்படையாக களமிறங்கிய "ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி"யோ, வன்முறையை அடிப்படையாகக் கொண்ட அடாவடித்தனத்தை தேர்தல் பிரச்சார நடைமுறையாக்கினர்.


தேர்தல் அறிவிக்கப்பட்ட நாட்கள் முதல் சட்டவிரோதமான செயற்பாடுகளையும், வன்முறைகளையும், வழமையை விட அதிகளவில் மக்கள் மீது ஏவிவிட்டனர். சிவில் சமூக கட்டமைப்பை முறைகேடாகவும், இராணுவ கட்டமைப்பைக் கொண்டு அடக்குமுறைகளை ஏவியதன் மூலம், மக்களை மிரட்டித் தமக்கு வாக்குப் போடக் கோரினர்.

எதிர் வேட்பாளர்களை மிரட்டுவது, தாக்குவது, சொத்துக்களை அழிப்பது தொடங்கி, வாக்காளர்களைச் சுதந்திரமாக வாக்களிக்க விடாது மிரட்டுவது தேர்தல் நடத்தையாகியது.

இனரீதியாக வடக்கில் தேர்தல் வன்முறையை திணித்த நிலையில், வடக்கு மக்கள் இதையே தேர்தலாக எதிர்கொண்டனர். இதன் மூலம் இனரீதியாக வாக்களிக்குமாறு, அரசு தமிழ் மக்களிடம் கோரியது. புலிகளுடன் நிற்பதாக காட்டிக் கொண்டு முள்ளிவாய்க்காலில் புலிகளைத் தோற்கடித்த மக்கள், அதே பாணியில் வடக்கிலும் அரசைத் தோற்கடித்தனர். அரசின் இந்தத் தோல்வி தான், மறு பக்கத்தில் தமிழ் இனவாதிகளின் அமோக வெற்றியானது. இதை முன்கூட்டியே அறுவடை செய்யும் வண்ணம், கூட்டமைப்பு தன்னை இன மீட்பாளராக காட்டிக் கொண்டு, எதிர் இனவாதத்தை முன்தள்ளியது.

(தொடர்ச்சி 15ம் பக்கத்தில்)

# அறிவு என்பது என்ன?



## மார்க்சியம் - 06

இயற்கைக்கும், உழைப்புக்கும், நுகர்வுக்கும் இடையிலான மனித உறவுகள் பற்றிய எதார்த்தமே அறிவாகும். இயற்கையில் இயற்கையாக வாழ்தல் அறிவல்ல. இயற்கையைச் சார்ந்து வாழும் மிருகங்கள் கொண்டிருக்கக் கூடிய வாழ்தல் முறை, அதன் அறிவின் பாலானதல்ல. மாறாக தன்னுணர்வு இன்றி அவை செயற்படுகின்றது. இயற்கையுடன் இணைந்த தகவுத் தன்மை கொண்டு இயங்குகின்றது. இயற்கையின் சூழலுடன் படிப்படியாக தன் நிலை மறுத்தல் மூலம் தன்னை இசைவாக்கிக் கொள்கின்றது. இது தன்னுணர்வின்றி, தகவுத் தன்மை கொண்ட திட்டமிட்ட செயல்கள் மூலம் வாழ்தலாகும். மிருகங்கள் இயற்கையின் போக்கில் எதிர்வினையாற்றுகின்றதே ஒழிய, முற்றாக தன் போக்கில் மாற்றும் திறனற்றது. இதற்கு மாறாக இயற்கையை தன் போக்கில் மாற்றும் மனிதத் திறன் தான், மனித அறிவாகியது. மனித கூட்டுச் செயல் முதலில் மொழியாகி, இறுதியில் அது மனித அறிவாகின்றது.

குழந்தையை எடுத்தால் முதலில் பெரியவர்களைக் பார்த்து அப்படியே தன்னறிவுடன் செயற்படத் தொடங்கும் போது, அது அறிவுக்கான கூட்டுச் செயற்பாட்டின் முதல் காலடியாகும். இதுதான் ஆரம்ப அறிவும் கூட. அதன் பின் அந்தச் செயலின் நோக்கத்தைப் புரிந்துகொண்டு, அதற்கு ஏற்றாற் போல் செய்யும் கூட்டுச் செயற்பாட்டுக்கு கருவியும் மொழியும் உதவுகின்றது. இது அறிவாகின்றது. குழந்தையில் இருந்து அறிவு படிப்படியாக பகுத்தறிவு பூர்வமானதாக, சிந்தனை பேச்சோடு மனிதனின் அறிவாகின்றது.

இயற்கையில் எதுவும் தனித்து இயங்குவதில்லை. மாறாக அவை ஒன்றையொன்று பாதிக்கின்றது. இதில் மனிதனுக்கும் மிருகத்துக்கும் வேறுபாடு கிடையாது. மிருகங்கள் கூட திட்டமிட்ட செயல்களைக் கொண்டபோதும், எங்கெல்ஸ் கூறியதுபோல் அதை ”சும்மா பயன்படுத்தவே” முடிந்தது. ஆனால் மனிதன் இயற்கைக்கு ”எஜமானாகி” தன் போக்கில் அதைப் பயன்படுத்துகின்றான். இயற்கையை தன் போக்கில் கையாளும் மனிதத் திறன் தான் அறிவு. இதனால் தான் இயற்கை விஞ்ஞானமே ”எல்லா அறிவுக்கும் அடிப்படையாக உள்ளன” என்றார் மார்க்ஸ். அறிவு என்பது இயற்கை பற்றிய அறிவுதான். அதாவது இயற்கையைத் தன் உழைப்பின் மூலம், தன் தேவைக்கு ஏற்ப மாற்றும் அறிவுதான் மனித அறிவு. மனித தேவைகளுடன் உருவான பொருள், எப்படி யாரால் எந்த வடிவில் நுகரப்படுகின்றது என்பதே, சமூகம் பற்றிய மனித அறிவாகின்றது.

ஏங்கெல்ஸ் மனிதனின் தோற்றம் பற்றிக் கூறும்போது, எந்த உயிரினத்தை விடவும், மனிதன் தான் ”அதிக சமூக உணர்வு கொண்ட மனிதனின் தோற்றத்தை சமூக உணர்வில்லாத மிக சமீபத்திய மூதாதையரிடையே தேடுவது சாத்தியமில்லை” என்றார். சமூகத்தை மையப்படுத்தாது தன்னை முன்னிலைப்படுத்தும் அறிவு இயற்கைக்கு முரணானது. இது மனிதனின் அறிவல்ல. இது மனிதனை மனிதன் அடிமைப்படுத்தும் அறிவாகும். இயற்கையை மறுத்துச் சூறையாடும் அறிவாகும். இப்படி மனித அடிப்படையாக மாறிய இயற்கையின் கூறுகளை மறுப்பதன் மூலம், மீண்டும் மிருகத்தனத்தை வந்தடைதலாகும். இயற்கையைத் தன்னுணர்வின்றி சூறையாடுவது மிருகத்தனமாகும். தன்னினத்தை தானே தன்னுணர்வுடன் சூறையாடுதல், மிருகத்தை விடவும் மிகக் கீழான நிலையாகும்.

சமூக உணர்வில்லாத இன்றைய தன்னுணர்வு கொண்ட தனியுடமை அமைப்பில் மனிதனைக் காண்பது எப்படிச் சாத்தியமில்லையோ, அதுபோல் மனிதனுக்கே உரிய அறிவைக் காணமுடியாது. சமூக உணர்வில்லாத அறிவு அறிவல்ல. மாறாக மிருகத்தன்மை கொண்ட, மனிதவிரோத தன்மையைக் கொண்ட அறிவாக அது இயங்குகின்றது.

சமூக உணர்வுள்ள அறிவு, மனிதனை மையப்படுத்துமே ஒழிய பொருளை மையப்படுத்தாது. பொருளில் இருந்து மனிதனைக் காணும் அறிவும், பொருளைப் படைக்கும் உழைப்பின் மூலம் மனிதனைக் காணும் அறிவுமாக, இன்று இரு வேறு உலகக் கண்ணோட்டங்களாக அறிவு பிரிகின்றது. இதனால் தான் எங்கெல்ஸ் கூறினார். ”... என்னைப் பொறுத்த வரை இயற்கைக்குள் இயக்க இயல் நியதிகளைப் புகுத்தி நிர்மாணிப்பது என்ற கேள்வியே எழ இயலாது. ஆனால், இயற்கையில் அவற்றைக் கண்டுபிடிப்பதும் இயற்கையிலிருந்து அவற்றைப் பரிணமிக்கச் செய்வதும் என்பதே கேள்வியாயிருந்தது.” என்றார். இன்றுள்ள கேள்வி, அறிவு எங்கிருந்து தோன்ற வேண்டும்? அறிவு என்பது இயற்கையில் இருந்து எழ வேண்டும். உழைப்பு உருவாக்கிய பொருளில் இருந்தல்ல. இயற்கையும் உழைப்பும் இணைந்ததே அறிவாக வேண்டும். இதற்கு மாறாக மனிதன் உற்பத்தி செய்த பொருளுக்கு, மனிதன் அடிமையாகிவிட்டான். அதாவது மனிதன் உருவாக்கிய பொருளுக்கு, மனிதனின் சிந்தனை செயல் அனைத்தையும் கீழ்ப்படுத்திவிட்டான். இதனால் அறிவு பொருளுக்குக் கீழானதாகி விடுகின்றது. தன் உழைப்பின் மூலமான பொருளுக்கு எஜமானாக இருக்கவேண்டிய மனிதன், பொருளுக்கு அடிமையாகிவிட்டான்.

இதன் அடிப்படையிலான மனித சிந்தனை, செயல் சார்ந்த அறிவு குறுகியதாகும். பொருளை முதன்மையாகக் கொண்ட இன்றைய மனிதவிரோத சமூக அமைப்புச் சார்ந்ததாக அறிவு பிரதிபலிக்கின்றது. கண்ணால் பார்ப்பது, காதால் கேட்பது, மூக்கால் நுகர்வது, தொட்டுணர்வது, சுவைத்து அறிவது என அனைத்தும், மனித புலனுணர்வுக்கு உட்பட்டு மனித அறிவாக உள்ளது. ஆனால் இது இந்த சமூக அமைப்பின் வரம்புக்கு உட்பட்டது. சுவை, அன்பு தொடங்கி அனைத்து விதமான மனித உணர்வுகளும் அதை வெளிப்படுத்தும் அறிவும் கூட, இந்தத் தனியுடமை அமைப்புக்குரியதே ஒழிய, இயற்கையான சமூக உணர்வு சார்ந்ததல்ல. இது இயற்கைக்கு விரோதமானது.

இந்த எல்லையில் தான் எம்மைச் சுற்றியவற்றை நாம் தெரிந்து கொள்கின்றோம். பொருளுக்கு அடிமையான தனியுடமை அமைப்பின் புலனுணர்வுக்கு உட்பட்ட எல்லைக்குள், மனித அறிவு குறுக்கப்பட்டு அதன் வரம்புகளால் மட்டுப்படுத்தப்பட்டு திணிக்கப்படுகின்றது. இயற்கைக்கு முரணான இந்த முரண்பாடுகள், வர்க்க முரண்பாடுகளாகின்றது. தனியுடமை அமைப்பில் மனித புலனுணர்வு என்பதை, தன்னை மையப்படுத்தியதாக குறுக்கி விடுவதன் மூலம், அதன் அறிவு விகாரமாகி வெளிப்படுகின்றது. அறிவு மலடாக்கப்பட்டு விடுகின்றது.

இதைப் பூசிமெழுகவே இன்று இயற்றப்படும் ”தகவல் அறியும் சட்டம்” ஒரு உண்மையைப் போட்டு உடைக்கின்றது. எமது அறிவு என்பது மட்டுப்படுத்தப்பட்டது என்பதும், அது இந்த அமைப்பின் மேலான வெறும் பூச்சு என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது. எமது அறிவு பொய்யானதாகவும், கண்மூடித்தனமானதாகவும் இருப்பதை ”தகவல் அறிவுச் சட்டம்” எடுத்துக் காட்டுகின்றது. உதாரணமாக, ஈராக்கில் அணுவாயுதம் இருப்பதாகக் கூறி அமெரிக்கா நடத்திய யுத்தம் பற்றிய எமது அறிவு இன்றும் பொய்யானது. ஈராக்கில் அணுவாயுதம் இல்லை என்று தெரிந்த பின்பும் கூட, யுத்தம் பற்றிய அறிவு உண்மையின் பாலானது அல்ல. அங்கு என்ன நடந்தது, என்ன நடக்கின்றது என்பது பற்றி மட்டுமல்ல, அமெரிக்கா தலைமையிலான இந்த உலகத்தின் பொய்மையைக் கூட மனித அறிவு மூலம் மாற்றத்துக்கு உள்ளாக்கவில்லை. இதேபோல் ”இஸ்லாமிய அடிப்படைவாதம்” பற்றிய எமது அறிவு என்ன? மேற்கு ஏகாதிபத்தியமும், உலகின் ஆளும் வர்க்கங்களும் தன் நலன் சார்ந்து உருவாக்கும் ”இஸ்லாமிய அடிப்படைவாதம்” பற்றிய புரிதலைக் கடந்து, அது பற்றிய வேறு அறிவு உள்ளதா? ”இஸ்லாமிய அடிப்படைவாதம்” தோன்றும் மூலம் என்ன? அது ஏன் தோன்றுகின்றது? இதை அறிந்து எமது அறிவு எதிர்வினையாற்றாத வரை, எமது அறிவு பொய்யானது. இன்று இலங்கையில் இனவாதம், மதவாதம் ..., எல்லாத் தளத்திலும் இயங்குவதன் பின்னுள்ள அறிவுதான் என்ன? இப்படித்தான் அனைத்தும்.

இங்கு இவற்றில் முழுமையாக ஒன்றைப் புரிந்து கொள்ளுவதற்குக் கூட, எம் அடிப்படை அறிவு சிரமப்படுகின்றது. எம் அடிப்படை அறிவு, சொந்த வாழ்வைக் கற்றுக் கொள்வதையும், தெரிந்து கொள்வதை மறுப்பதையுமே சாரமாகக் கொண்டது. இந்த சமூக அமைப்பே அப்படிப்பட்டது. மனிதனை மனிதன் தெரிந்து கொண்டு வாழ்வதை மறுப்பது தான், இந்த அமைப்பின் அறம், அறிவு எல்லாம். மனிதனை மனிதன் வெறுக்கவும், தன்னை மற்றவனுக்கு மேலாக மேம்படுத்திக் காட்டவும், இந்த அமைப்பை பாதுகாப்பதுமே, மனித அறிவாக குறுக்கப்படுகின்றது. எதைப் பார்ப்பது, எதைக் கேட்பது, எதை நுகர்வது ..., என்று அனைத்தும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டு திணிக்கப்பட்டு விடுவதே அறிவாக்கப்படுகின்றது. அதாவது இந்த அமைப்பில் அடைத்து விடப்பட்ட மந்தைக்குரிய நிலையில், மனித அறிவு குறுக்கப்பட்டு விடுகின்றது.

இந்த நிலையில் எம்மைச் சுற்றிய இயக்கம் பற்றிய, பொருள் பற்றிய அறிவு உள்ளடக்கமற்றது. இதை புலனுணர்வுக்குள் உள்வாங்கித் தெரிந்து கொள்ளும் போது, குறுகியதாகி புலனுணர்வுக்கு அப்பாற்பட்டவற்றை புரிய முடியாத ஒன்றாக மாறுகின்றது. இதுதான் மார்க்சியத்தை புரிதலில் உள்ள இடைவெளியுமாகும். தனிமனித புலனுணர்வுக்கு அப்பால் முழு உலகம் தளுவியதாக மனித வாழ்வைப் புரிந்துகொள்ள நாம் முனையும் போது, எம் அறிவு பல மடங்காகின்றது. மார்க்சியத்தை புரிந்து கொள்வது என்பது கூட, எம் வாழ்வு பற்றிய அறிவை, சமூக வாழ்வு சார்ந்த அறிவாக விருத்தி செய்வது தான்.

ஒன்றில் இருந்து மற்றொன்றைப் பிரித்து இதைப் புரிந்துகொள்ள முடியாது. எம் வாழ்வை நாம் முழுமையில் புரிதல் அவசியமானது. இங்கு எமது புரிதல் எங்கிருந்து எமக்கு கிடைக்கின்றது? இந்த தனியுடமை அமைப்பிற்கு ஏற்ப, மனிதப் புலனுணர்வு உள்ளாக்கும் எல்லைக்குள் அறிவை உருவாக்குகின்றது. இந்த அமைப்பில் எதை, எப்படி, எந்த வகையில், எந்த அளவில், நுகர வேண்டும் என்பதைக் கடந்து, அறிவுக்கு இடமில்லை என்பதே உண்மையாக இருக்கின்றது.

இன்று அறிவு குறித்த சட்டங்கள், அறிவு தனியுடமை ஆகிவிட்டதைக் காட்டுகின்றது. அறிவு சந்தைப் பொருளாகிவிட்டது. சர்வதேச ரீதியாகவும், நாடுகள் ரீதியாகவும், மூலதனம் சார்ந்தும், தனிமனிதன் சார்ந்ததுமான ”அறிவுச் சொத்துடமை” சட்டங்கள் காணப்படுகின்றது. இது யாருக்கு எதிராக, எதைப் பாதுகாக்க என்ற கேள்வியை இங்கு இயற்கையாக எழுப்புகின்றது. மனிதனுக்கு எதிரான அறிவுடமைச் சட்டங்கள். மனிதனில் இருந்து அறிவைப் பிரிக்கும் தனியுடமைச் சட்டங்கள். மனிதனுக்கு எதிரான சட்டங்கள்.

பாரம்பரியமான மனித அறிவுக்கு எதிரானதே இந்தச் சட்டங்கள். பழைய அறிவில் இருந்து தோன்றும் அறிவு, தனியுடமை ஆக்கப்படுகின்றது. சமூக உயிரியான மனிதனின் வாழ்வியலில் இருந்து, அறிவை இச் சட்டங்கள் பிரித்தெடுக்கின்றது. மனித அறிவில் இருந்து உள்ளடக்கத்தை உறிஞ்சி தனியுடமை ஆக்குவதன் மூலம், மனித அறிவு வெறும் கோதாக்கப்படுகின்றது. உதாரணமாக இன்று மஞ்சள், இஞ்சி, வேம்பு ..,. போன்ற எத்தனையோ பாரம்பரிய மனித அறிவு சார்ந்த மனிதக் கண்டுபிடிப்புகளை, மனிதனுக்கு மறுத்து விடுகின்றது இச் சட்டம். ஆனால் இவற்றை தனிமனித கண்டுபிடிப்பாகக் காட்ட முற்படுகின்றனர். இப் பொருட்களில் உள்ள எந்தக் கூறு, குறிப்பாக குறித்த

(தொடர்ச்சி 15ம் பக்கத்தில்)



# இனவாதத்தை முன்னிறுத்தி சிந்திப்பது, செயற்படுவது சமூக விரோதமானது



இனரீதியான ஒடுக்குமுறையை, அதே இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு இனரீதியாக எதிர்கொள்வது சரியானதா!? இது இனவொடுக்குமுறைக்கு தீர்வைத் தருமா? இனரீதியாக ஒடுக்குபவனின் அரசியல் பொருளாதார நோக்கத்தை ஆராய்ந்து அதற்கு எதிராக போராடுவதற்கு பதில், இனவொடுக்குமுறை வடிவத்தை மட்டும் எதிர்க்கின்ற இனவாத அரசியல் தவறானது. இது அதே இனவாதத்தைப போற்றி தனதாக்குவதுடன், ஒடுக்குபவனின் அரசியல் பொருளாதார நோக்கத்தை பாதுகாக்கின்ற படுபிற்போக்கான அரசியலாகி விடுகின்றது.

இந்த அடிப்படையில் இனரீதியாக கட்டமைக்கப்படுகின்ற இனவாத வாக்களிப்புகள், மக்கள் நலன் சார்ந்த அரசியல் அல்ல. இதன் அர்த்தம் இதைக் கடந்து இனவொடுக்குமுறையாளனுக்கு வாக்களிப்பதல்ல.

மாறாக இனம் கடந்து சமூக பொருளாதார அரசியல் அடிப்படையில் நின்று சிந்திப்பதையும், செயற்படுவதையும் முன்னிறுத்தி, மனிதனாக முன்னிறுத்தி நிற்க வேண்டும். இனவொடுக்குமுறையை முன்னெடுப்பவனதும், இனவாதத்தை முன்னிறுத்துபவனதும் நலன் என்பது, வெறும் இன நலன் சார்ந்தல்ல. மாறாக இதற்கு பின்னான சமூக பொருளாதார அரசியல் நலனை முழுமையாக இனம் கண்டு கொள்வதன் மூலம் தான், எம்மை இன ரீதியாக பிரித்து மோசடி செய்வதை தடுக்கவும், எம்மை நாம் ஏமாற்றிக் கொள்ளாமல் இருக்கவும் வழி பிறக்கும்.

இனவாதம் என்பது சமூகத் தன்மை கொண்டதல்ல, அது சமூக விரோதமானது

இனவாதம் என்பது எங்கும் எப்போதும் குறுகியதும், வக்கிரமானதுமாகும். சிறுபான்மை பெரும்பான்மை என்று, இனவாதத்துக்கு எந்த வேறுபாடும் கிடையாது. இனவாதம் ஒத்த தன்மை கொண்டதாகும். ஒடுக்கும், ஒடுக்கப்படும் என்ற எந்த வேறுபாடும் இன்றி, இனவாதம் ஒத்த தன்மைகள் கொண்டது. இனவாதம் தனித்து இயங்குவதில்லை. மாறாக சமூகத்தில் நிலவும் பிற சமூக ஒடுக்குமுறைகளைச் சார்ந்து, தன்னை முன்னிறுத்திக் கொண்டு இயங்குகின்றது. இந்த இனவாதம் சுரண்டும் வர்க்கத்தை மூடிமறைத்தபடி, அதை பாதுகாத்து முன்னெடுக்கும் பிற்போக்கு கோட்பாடாகவே இயங்குகின்றது. இனவாதம் அரசியல் ரீதியாக ஏகாதிபத்தியத் தன்மை கொண்டது. இனவாதம் என்பது தேசியவாதமல்ல. முதலாளித்துவ தேசியவாதம் என்பது இனவாதமல்ல. சமூகத்தில் புரையோடிக் கிடக்கும் படுபிற்போக்கான கூறுகளைக் கொண்டு, தன்னை வெளிப்படுத்துவது தான் இனவாதம். இதற்கு எதிரானதே தேசியவாதம்.

இனவாதம் சார்ந்து நின்று கடந்த தியாகங்களை, இந்த சமூக எல்லைக்குள் நின்றுதான், நாம் புரிந்துகொள்ள வேண்டும். தியாகமும் அர்ப்பணிப்பும் கொண்ட வாழ்வு மக்களுக்கானதாக அமையவேண்டும் என்றால், சமூகத் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். அது தன் இன, சக இன மனிதனை நேசிப்பதாக இருக்கவேண்டும். மனிதன் மீதான அனைத்து ஒடுக்குமுறைகளை

> **"இந்த இனவாதம் என்பது தவறான போராட்டமாகவும், சமூகவிரோத குற்றங்களுக்கான அரசியல் அடிப்படையுமாகும். இந்த வகையில் மனித விரோதக் கூறாகவே, எப்போதும் எங்கும் இனவாதம் செயல்படுகின்றது. இதை மறுதளித்து போராடாத மனிதன், சமூகத்தில் நேர்மையாக இருக்கவும் நேர்மையாக வாழவும் முடியாது. இதை இனம் காண்பதற்காகவும், இதை மறுதளிப்பதற்கான சுய போராட்டத்தையும், சமூகம் நடத்தியாக வேண்டும்."**

செய்பவர்களையே வெறுப்பதாக இருக்க வேண்டும். மனிதனை மனிதன் நேசிக்காத இனவாதத்துக்கு, எந்த சமூகத் தன்மையும் தகுதியும் கிடையாது. இனவாதம் சார்ந்த தியாகங்கள், மனிதத்தன்மை கொண்டவையல்ல. இங்கு சுயநலமற்ற, அறியாமை சார்ந்த எல்லைக்குள் மட்டும் தான், தியாகங்களைப் புரிந்து கொள்ளவும் அங்கீகரிக்கவும் முடியும். இதற்கு அப்பால் இனவாதம் சார்ந்தவை அனைத்தும், சாராம்சத்தில் மனிதவிரோதத் தன்மை கொண்டவை.

இங்கு இனவாதத்துக்கு எதிரான போராட்டத்தின் மூலம் தான், சுயநலமற்ற அறியாமை சார்ந்த தியாகங்களை சரியாக முன்னிறுத்திப் பாதுகாக்க முடியும். இனவாதத்துக்கு எதிராக சமூகத் தன்மையை மீட்டு எடுக்கும் போராட்டம் தான், அர்த்தமுள்ள தியாகங்களை கூட சரியாக முன்னிறுத்தி அர்த்தப்படுத்தும்.

இதுவல்லாத இனவாதம் என்பது மனிதத்தன்மை கொண்டதல்ல. மாறாக மனித விரோதக் கூறாகும். மனிதனை மனிதன் இனரீதியாக பிளக்கும் கூறாகும். இதன் மூலம் இனத்தின் உள்ளான பிளவை மூடிமறைக்கும் கூறாகும். சமூகம் மீது வன்முறையை ஏவும் கூறாகும். எந்தவிதமான இனவாதமாகவும் இருக்கலாம், இனத்தின் ஊடாக சமூகத்தைப் பார்க்க முனைந்தால், அதன் பின், மனித விரோதமாகவே அது வெளிப்படும். சிந்தனை, செயல் அனைத்தும், சமூகத் தன்மையற்றதாக செயலாற்றும். அது தன்னைச் சுற்றி ஒரு குறுகிய தற்காப்பு வட்டத்தை உருவாக்கி கொண்டு விடுகின்றது. தன்னை மற்ற இன மக்களில் இருந்து வேறுபடுத்திக் கொள்கின்றது. மற்றைய இனத்துக்கு எதிரான குற்றங்களைச் செய்வதற்கான நியாயத்தை முன்வைப்பதுடன், இனவாதம் சார்ந்து குற்றங்களை தயக்கமின்றி செய்யத் தூண்டுகின்றது. இனக் குற்றங்களாகவோ, சமூகவிரோத செயலாகவோ இனவாதம் கருதுவதில்லை. இப்படி இருக்காமல் இருப்பதையே, அது சமூகவிரோதமாக கருதுகின்றது.

மனித விரோதக் குற்றங்களை இனப் பெருமையின் வெளிப்பாடாக காட்டுகின்றது. இந்த வகையில் தன் இனத்தை பெருமைப்படுத்திக் கொள்ளவும், மற்றைய இனத்தை சிறுமைப்படுத்திக் காட்டியும் விடுகின்றது. இப்படி பரஸ்பரம் மனிதவிரோதத்துடன் தான், எதிரெதிராக இனவாதங்கள் பிரிந்து எதிர்வினையாற்றுகின்றது. ஒன்று இன்றி மற்றது இல்லை. ஆக ஒன்றைக் காட்டி மற்றொன்றின் இருப்பை நியாயப்படுத்த, எந்த மக்கள் சார்ந்த அரசியல் அடிப்படையும் கிடையாது. இப்படி இருக்க, இனவாதத்தை முன்வைப்பது அரசியல் மோசடியாகும்.

அரசியல் சமூக பொருளாதார அடித்தளத்தின் மேல் இயங்கும் ஆளும் வர்க்கங்களும், அதிகாரத்துக்கு வரத்துடிக்கும் சமூகப் பிரிவுகளும், ஆட்சியாளர்களும் தான் இனவாதத்தை மக்கள் மத்தியில் திணிக்கின்றனர். இந்த இனவாதம் மூலம் மக்களை பிரிப்பதும், அவர்களை மோத வைப்பதும், எதிர் வன்முறையையும் ஏவுகின்றனர். இதன் மூலமான இனக் குற்றங்களை, இனத்தின் பெருமைக்குரிய ஒன்றாக மாற்றுகின்றனர். இனம் கடந்து மக்கள் சேர்ந்து வாழ்வதை குற்றமாக, அவமானமாக காட்டி தடுக்கின்றனர். இதன் மூலம் மக்கள் தங்கள் பொது எதிரியை இனங்கண்டு கொள்வதை தடுக்கின்றனர். உண்மையில் மக்களின் பொது எதிரிகளின் பக்கத்தில் நிற்பவர்கள் தான், மக்கள் மத்தியில் இனவாதத்தை தூண்டுகின்றவர்களாக இருக்கின்றனர். இதன் மூலம் இனவாதிகள் சமூகவிரோதிகளாகவே இயங்குகின்றனர்.

இந்த இனவாதம் என்பது எங்கிருந்தாலும், அது எப்படி இருந்தாலும் சரி, அவை சமூக விரோதத் தன்மை கொண்டவை. ஒரு இனவாதத்தைக் காட்டி, இன்னொரு சமூக விரோத இனவாதத்தை உருவாக்க முடியாது. எந்த இனவாதத்தையும் நியாயப்படுத்த முடியாது. இனவாதம் எங்கும், எப்போதும் மற்றைய இன மக்களை இழிவுபடுத்தித்தான், தன் சமூக விரோதத்தை இனவாதமாக கட்டமைக்கின்றது. மற்றைய இனத்தை ஒடுக்க, தன் இனம் சார்ந்து பிற்போக்கு கூறுகள் சார்ந்தே இனவாதம் தன்னைத் தயார் செய்கின்றது.

இந்த இனவாதம் என்பது தவறான போராட்டமாகவும், சமூகவிரோத குற்றங்களுக்கான அரசியல் அடிப்படையுமாகும். இந்த வகையில் மனித விரோதக் கூறாகவே, எப்போதும் எங்கும் இனவாதம் செயல்படுகின்றது. இதை மறுதளித்து போராடாத மனிதன், சமூகத்தில் நேர்மையாக இருக்கவும் நேர்மையாக வாழவும் முடியாது. இதை இனம் காண்பதற்காகவும், இதை மறுதளிப்பதற்கான சுய போராட்டத்தையும், சமூகம் நடத்தியாக வேண்டும்.

இந்த வகையில் தான் இன்று இலங்கையில் நிலவும் இனமுரண்பாட்டை எப்படி கையாள்வது என்ற கேள்விக்கு விடைகாண வேண்டும். நாங்களும் இனவாதியாக மாறுவதா என்ற அடிப்படையான கேள்விக்கு, பகுத்தறிவுள்ள அனைவரும் சிந்திக்கவும், பதில் அளிக்கவும் வேண்டும். தவறான கண்ணோட்டத்தையும், நடத்தையையும் மறுத்து, அதற்கு எதிராக வாழ்தல் தான் அடிப்படையான நேர்மையாகும். இந்த வகையில் சமூக விரோதம் கொண்ட இனவாதத்தை, சமூகம் சார்ந்து எப்படி எதிர்த்து நிற்கின்றோம் என்பதை நடைமுறையில் நிறுவியாகவேண்டும். இன்று சவால் மிக்க அரசியல் சமூகப் பணி இதுதான்.



# பட்டதாரி பயிலுனர்களும் இன்றைய பிரச்சினைகளும்

இலங்கையில் இதுவரை 52,000 பட்டதாரிகள் பயிலுனர்களாக நியமனம் வழங்கப்பட்டுள்ளனர். ஆரம்பத்தில் இன் நியமனங்கள் வழங்கும்போது 6 மாத பயிற்சி அதன்பின் நிரந்தர நியமனம் வழங்குவதாகவும் பல்வேறு அமைச்சர்களால் வாக்குறுதிகள் வழங்கப்பட்டன.

ஆனால், அதன்பின் 6 மாதம் 1 வருடமாக நீடிக்கப்பட்டதாக சுற்று நிருபம் ஒன்று சில பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பப்பட்டது. சில சுற்று நிருபங்களில் 6 மாத பயிற்சி காலவரையரையின்றி நீடிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. இதனால் பட்டதாரி பயிலுனர்கள் அதிர்ச்சி அடைந்தததுடன் பலத்த ஏமாற்றமும் அடைந்தனர்.

எவ்வாறாயினும் தமது ஜீவனோபாயத்தினை கருத்திற் கொண்டு பொறுமையுடன் இதுவரையும் பட்டதாரி பயிலுனர்களாக தமது சேவையை தொடர்கின்றனர்.

இப்பட்டதாரிகளை பயிலுனர்களாக சேர்ந்துக்கொள்ள பட்டங்கள் எண்ணிலடங்காதவை. அவற்றை பின்னோக்கிப் பார்த்தால் பட்டதாரிகளாகிய இவர்களது வேலையற்ற பட்டததாரிகள் சங்கம், மாவட்ட, மாகாண, பிரதேச பட்டதாரி சங்கங்கள் நாடுபூராவும் வீதி வீதியாக போராட்டங்கள, ஆர்ப்பாட்டங்கள, உண்ணாவிரதங்களை நடத்தி தமது தொழில் வாய்ப்பை கோரி நின்றனர். இதனால் அவமானங்களும், உடல், உளரீதியான பாதிப்புக்களையும், பாதுகாப்பு பிரச்சினைகளையும் எதிர்கொண்டனர். அதில் குறிப்பாக வட கிழக்கில் வாழும் பட்டதாரிகள் யுத்தம், சுனாமி, வெள்ளப் பெருக்குகளால் பெரிதும் பாதிக்கப்பட்டு இருந்தனர்.

இவர்கள் பயங்கரவாதப் பிரச்சினை என்ற போர்வையில் போராட்டங்களை நடத்தவிடாது அச்சுறுத்தப்பட்டனர், தாக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு பல இன்னல்களுக்கு மத்தியில் கஸ்ட்டங்களையும் அனுபவித்து இறுதியில் தமக்கு வழங்கப்பட்ட பட்டதாரி பயிலுனர் நியமனம் 6 மாதத்துடன் நிரந்தர நியமனம் எனும் கனவுடன் இருந்தனர்.

இந்த பயிற்சிக் காலத்தில் அவர்கள் அனுபவிக்கும் கஸ்ட்டங்களும் பட்டதாரிகளாக இருந்த காலத்தைப் போலவே தொடர்கின்றன. அந்த வகையில் அவற்றைப் பார்த்தால்,

தற்போது பட்டதாரி பயிலுனர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டு பல மாவட்டங்களில் 1 வருடம் நிறைவடைந்து விட்டன. சில மாவட்டங்களில் ஒரு வருடத்தை அண்மித்துள்ளன. இவ்வாறு நிரந்தர நியமனம் இழுத்தடிக்கப்படுவதால், பட்டதாரிகள் மன உளைச்சலுக்கு ஆளாகி உள்ளனர். தமது எதிர்காலம் குறித்து கேள்விக் குறியாகவே உள்ளதாக கூறுகின்றனர்.

மேலும் இதனால் பல இளைஞர், யுவதிகளின் திருமணங்கள் தடைபட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், மாதாந்த கொடுப்பனவான 10,000 ரூபா தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்பில் போதுமானதாக இல்லை. அதுமட்டுமன்றி திருமணமான பட்டதாரி பயிலுனர்கள் பெரிதும் பாதிக்கப்படு கின்றனர்.

மேலும், பட்டதாரி பயிலுனர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள் பல km வெளிக்களப் பணிக்கு அனுப்பப்படுகின்றனர். அவர்களுக்கு எந்தவித போக்குவரத்து கொடுப்பனவுகளும் வழ ங்கப்படுவதில்லை. இதனால், அனைவருக்கும் வழங்கப்படும் 10000 ரூபா போக்குவரத்து செலவுக்கே போதுமானதாக இல்லை.

மேலும் பட்டதாரி பயிலுனர்கள் தமது பயிற்சிக்கு சம்பந்தம் இல்லாத வேலைகளுக்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். உதாரணமாக பாடசாலைகளில் கல்வி கற்பிக்க சென்ற பயிலுனர்கள் உலர் உணவு சமைக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

மேலும், பயிற்சி இடங்களில் அவமானப்படுத்தும் காரியங்களும் இடம் பெறுகின்றன. தகாத வார்த்தை பிரயோகம் பாவிக்கப்படுகின்றது. 10000 ரூபா கூட்டம் எனக்கூறி அழைப்படுகிறார்கள். இதனால் உளரீதியாக பாதிக்கப்படுகின்றனர்.

மேலும் மாதாந்த கொடுப்பனவுகூட உரிய நேரத்தில் வழங்கப்படுவதில்லை. இதனால், பொருளாதாரப் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

மேலும் பட்டதாரிகள் தற்போது அமைச்சு, திணைக்களங்களுக்குள் உள்வாங்கப்பட்டு வருகின்றனர். இவர்களுக்கு இந் நியமனம் வழங்குவதில் பல முறைகேடுகள் இடம் பெறுகின்றன. அதில் ஆண்டடிப்படையில் பட்டதாரிகள் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

> **மேலும், பயிற்சி இடங்களில் அவமானப்படுத்தும் காரியங்களும் இடம் பெறுகின்றன. தகாத வார்த்தை பிரயோகம் பாவிக்கப்படுகின்றது. 10000 ரூபா கூட்டம் எனக்கூறி அழைப்படுகிறார்கள். இதனால் உளரீதியாக பாதிக்கப்படுகின்றனர்.**

உதாரணமாக, 2007, 2008ம் ஆண்டு பட்டம் முடித்த பட்டதாரிகள் இருக்கும்போது, 2011ல் முடித்த பட்டதாரிகளுக்கு அரசியல் செல்வாக்கு மூலம் மாவட்ட செயலக, பிரதேச செயலக, மற்றும் அமைச்சுத் திணைக்களங்களுக்கு இணைக்கப்படுகின்றனர்.

மேலும், அரசியல் பழிவாங்கல்களும் இடம்பெறுகின்றன. தமது கட்சிக்கு விசுவாசம் அற்றவர்கள், குறிப்பாக ஆளும் கட்சிக்கு எதிரானவர்கள் பழிவாங்கப்படுகின்றனர்.

பொருளாதார அமைச்சில் இணைக்கப்பட்ட பயிலுனர்கள் பின் நீக்கப்பட்டு ஆளும் கட்சி சார்பானவர்கள் இணைக்கப்பட்டனர்.

இவ்வாறு பல இன்னல்களுக்கு மத்தி யில் பயிற்சியை தொடரும் பட்டதாரிப் பயிலுனர்கள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கடிதத் தலைப்புடனான கடிதத்தின் மூலம் கட்டாயத்தின் பெயரில் வற்புறுத்தி நிரந்தர நியமனம் என பொய்யான பிரச்சாரம் ஊடாக ஒவ்வொரு பயிலுனரும் அழைக்கப்பட்டு அரசியல் இலாபத்துக்கு பயன்படுத்தப்பட்டு ஏமாற்றப்பட்டனர்.

இவ்வாறு பட்டதாரிகளான பல திறமைகளைக் கொண்ட இளைஞர் சமுதாயம் சரியான திட்டமிடலின்மையால் திறமைகள் மழுங்கடிக்கப்பட்டு கொண்டிருக்கின்றன. இந்நாட்டின் அபிவிருத்திக்கு இப்பட்டதாரிகளை சரியான முறையில் பயன்படுத்தினால் நாடு அபிவிருத்தி அடைவது உறுதி.

மேலும் தற்போதைய அனைத்துப் பட்டதாரிகளின் எதிர்பார்ப்பும் அனைத்து பட்டதாரி பயிலுனர்களும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு தமது வாழ்வாதாரம் உயர்த்தப்பட வேண்டும் என்பதே ஆகும். இதற்கமைய பட்டதாரிகள் போராடுகிறார்கள். பட்டதாரிகள் அரசுக்கோ அரசாங்கத்துக்கோ எதரானவர்கள் அல்ல எனவும் கூறி தமது ஒளிமயமான எதிர்காலத்திற்காக நிரந்தர நியமனத்தையே எதிர்பார்த்து நிற்கின்றனர். (மட்டக்களப்பு பட்டதாரிகளிடமிருந்து வந்த ஆக்கம்)

## மலையக மக்களின் அவல வாழ்வியல்..!

எமது நாட்டின் வருமானத்தில் ஏகப்பெரும்பான்மையான வருவாயைப் பெற்றுத்தரும் மலையக மக்கள் இன்றும் தோட்டத் தொழிலாளர்களாகவே நாட்கூலி சம்பளத்திற்கு பணிபுரிகின்றனர். இவர்களுக்கான கல்வி சுகாதாரம், போக்குவரத்து, வீட்டு வசதி உள்ளிட்ட சகல அடிப்படை வசதிகள் யாவும் மிகத் தாழ்ந்த மட்டத்திலேயே காணப்படுகின்றன. அவர்களது வாழ்க்கைத் தரம் நாட்டின் ஏனைய மக்களது வாழ்க்கைத் தரத்தையும் விட மிகவும் கீழ் மட்டத்திற்கே தள்ளப்பட்டுள்ளது. சுகாதார வசதிகள் வாழ்வதற்குத் தகுதியற்ற முறையில் காணப்படுவதோடு, கலாச்சாரம் மற்றும் வாழ்க்கைமுறை மாத்திரமன்றி, குடும்ப உறவுகளைக் கூட நெருக்கடிக்குள் தள்ளும் “லைன் காம்பரா” எனும் குடியிருப்பு வாழ்வியல் முறை மிகமிக அபத்தமானது. .

சமகால நிலையில் மலையக மக்களின் வறுமை 32வீதம் ஆகும். இது முழு இலங்கையினதும் வறுமை வீதத்தில் 15.2ற்கும் குறைவாக உள்ளது. அத்தோடு சத்தான உணவு, தேவையான



அளவு கலோரிகள் இன்றி அந்த மக்கள் ஆரோக்கியமற்றவர்களாகவே வாழ்கின்றனர். இதில் பெண்களின் ஆரோக்கியம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் பிறந்து 28 நாட்களுக்குள் மரணிக்கும் குழந்தைகளின் விகிதாசாரம் நாட்டில் பொதுவாக ஆயிரத்துக்கு 13.9 ஆக இருக்கும் போது, மலையக மக்களைப் பொறுத்தவரை விகிதாசாரம் 31 ஆக இருக்கிறது. 5 வயதுக்கும் குறைவான பிள்ளைகளின் மரண விகிதாசாரம் ஆயிரத்துக்கு 51.6வீதமாகும். மலையகத்தில் பிறக்கும் பிள்ளைகளின் வளர்ச்சிக்குன்றல் நகர்ப்புற பிள்ளைகளை விட மூன்றுமடங்காகும். இன்று மலையக மக்கள் தோட்ட வைத்தியசாலையை நம்பி இருக்கின்ற நிலையில் இவைகளின் சேவை மிகவும் தாழ்ந்த நிலையிலேயே உள்ளன.

1970 களின் பின்னர் படிப்படியாக அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்ட தோட்டப் பாடசாலைகளின் கல்வித்தரம் மற்றும் வளங்கள் விநியோகம் நாட்டின் தேசிய மட்டத்துடன் ஒப்பிடுகையில் மிகவும் தாழ்ந்த நிலையிலேயே உள்ளது. இதில் பாடசாலை இடைவிலகல் முக்கியப் பிரச்சினையாக உள்ளது. 5ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாடசாலையை விட்டு வெளியேறும் பிள்ளைகளின் விகிதாசாரம் 8.4 வீதமாகவுள்ளது. கிராமம் மற்றும் நகரத்தைக் காட்டிலும் மிகவும் பின்தங்கிய சமூக பொருளாதார சுகாதார நிலைமைகளிலேயே மலையகமக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

ஆசியாவில் உன்னதமான ஜனநாயக வாழ்வு எம்நாட்டில் தானென, மகிந்த குடும்ப அரசு புளகாங்கிதம் அடைகிறது. இதற்கு ஆமாம் என சுகபோக வாழ்வு வாழும் மலையக மக்கள்விரோதத் தலைமைகளும் தஞ்சாவூர் பொம்மைகள் ஆடுவது போல் தலை ஆட்டுகின்றன. ஆனால் எம்நாட்டு மக்களின் சகல வாழ்வும் இப்படித்தானென மலையக மக்களின் வாழ்வாதாரத்தரம் முன்னுதாரணம் காட்டுகின்றது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். தரமான வாழ்வாதாரத்திற்கு மலையக மக்கள் வாழ்வு ஒரு சோற்றுப் பதமாக உள்ளது.

இலங்கை ஜனநாயக சோ' லிஸ குடியரசு' அதி விீ'ட வர்த்தமான அறிவித்தல்களை வெளியிடுவதில் கைதேர்ந்ததாக இருக்கின்றது. அதன்படி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனம்தான் மாலபே பட்டதாரி பட்டம் வழங்கும் கடை என்பது

மாலபே பிரதேசத்தில் ஷசவுத் ஏசியன் இன்ஸ்டிடியூட் ஒப் டெக்னோலொஜி அன்ட் மெடிசின்' (South Asian Institute of Tecnology And Medicine) சுருக்கமாகக் கூறுவதாயிருந்தால் SAITM என்ற பெயரில் தனியார் மருத்துவக் கல்லூரியொன்று இங்குவதாக தற்போதைய உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக அந்த விீ'ட வர்த்தமானி அறிவித்தலை தலைமேல் வைத்துக் கொண்டு பெருமையடித்துக் கொள்கிறார். மேற்படி நிறுவனம் தொடர்பில் இம்மாதம் 26ம் திகதி மீண்டும் ஒரு அதிவிீ'ட வர்த்தமான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

மாலபே தனியார் கல்வி நிறுவனம் தொடர்பிலான வரலாற்றை எடுத்துக் கொண்டால். 2009 மே மாதம் 10ம் திகதி டைம்ஸ் பத்திரிகையில் அரசாங்கம், விளம்பரமொன்றை வெளியிடுகிறது. அதில் ஷதெற்காசிய தொழில்நுட்ப விஞ்ஞான மற்றும் முகாமைத்துவ' நிறுவனமொன்று ரஸ்யாவின் "ஷநினி நொவ்குரோத்" மருத்துவ அகடமியோடு இணைக்கப்பட்டதாகவும் அதற்காக இலங்கை மருத்துவ சபையின் அங்கீகாரம் கிடைத்திருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், நினி நொவ்குரோத் மருத்துவ அகடமியின் பணிப்பாளர் அலெக்ஸி பொஸட்நிகோஸ ின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட கடிதத்தின் மூலம் மற்றும் ரஸ்யாவிற்கான இலங்கை தூதர் உதயங்க வீரதுங்க அவர்களால் வெளியிடப்பட்ட கடிதத்தின் மூலம் ளுயுஐவுஆ நிறுவனம் ஷநினி நொவ்கொரோத் மருத்துவ அகடமியோடு இணைக்கப்படவில்லையென அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், இலங்கை மருத்துவர் சபையும் சிங்களத்தில் மற்றும் ஆங்கிலத்தில் பத்திரிகை அறிவித்தல்களை வெளியிட்டு " சண்டே டைம்ஸ்" பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்த விளம்பரம் பொய்யானது எனக் கூறியது. " இலங்கை மருத்துவர் கட்டளைச் சட்டத்திற்கு (அத்தியாயம் 105) ஏற்ப இந்தச் சபைக்கு மாலபே மருத்துவக் கல்லூரியின் மருத்துவக் கல்வி நிகழ்ச்சி நிரலை கண்காணிப்பதற்கோ, அதன்பின்னர் வழங்கப்படும் பட்டத்தை ஏற்றுக் கொள்வதற்கோ சட்டபூர்வமான ஏற்பாடுகள் இல்லை" என தெளிவாகக் குறிப்பிட்டிருந்தது. அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மாலபே மருத்துவர் பட்டம் வழங்கும் கடைக்கு புதுமையான அங்கீகாரமொன்றை பெற்றுக் கொடுக்க முயற்சிக்கப்பட்டது. அதற்கேற்ப 18 மாதங்களில் பிரதான 8 நிபந்தனைகளை பூர்த்தி செய்ததன் பின்னர் MBBS மற்றும் Sergeon பட்டங்களை வழங்க முடியுமென அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. 2011ல் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டாலும், அந்த நிறுவனத்திற்கு 2009 செப்டம்பர் 1ம் திகதி மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார்கள். 18 மாதங்களில் பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகளில் குறிப்பிட்ட தரத்தைக் கொண்ட போதனா வை-




# மாலபேயில் "டொக்டர்" பட்ட

த்தியசாலையும் விரிவரை மண்டபம், கேட்போர் கூடம் மற்றும் பரீட்சை மண்டபம் விரிவுரையாளர்களுக்கான அறைகள், இரசாயணகூடம் மற்றும் பொழுது போக்குக்கான வசதிகள், நூலகம், ஆய்வுக்கான வசதிகள், மருத்துவக் கல்வி அலகுகள் போன்ற அனைத்தும் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. ஆகக் குறைந்த வசதிகளைக்கூட பூர்த்தி செய்யாத இவ்வாறான நிறுவனமொன்று பட்டம் வழங்கும் நிறுவனமாக அங்கீகாரம்பெற்றது எப்படி என்பதும், அதற்கு மாணவர்கள் எப்படி சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் என்பதும் பிரச்சினையாக இருக்கின்றது. அவற்றுக்கு பதில் கிடையாது.

எந்தவொரு மருத்துவக் கல்லூரியும் போதனா வைத்தியசாலையாக இருக்க வேண்டியது கட்டாயமாகும் மருத்துவர்களாக பயிற்சி பெறுவோர் நோயாளர்களுகக் சிகிச்சையளித்துக் கொண்டே செயல்முறை பயிற்சி பெற வேண்டும். ஆனால், ஆட்சியாளர்கள் என்ன செய்தார்ள் என்றால், கலாநிதி நெவில் பர்னாந்து தனியார் வைத்தியசாலையை மாலபே பட்டதாரி பட்டம் வழங்கும் கடையோடு இணைக்கப்பட்ட போதனா வைத்தியசாலையாக அறிவித்தார்கள். ஆனாலும், 2012 டிசம்பர் 22ம் திகதி அது குறித்து விளக்கமளித்த சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, மேற்படி தனியார் மருத்துவக் கல்லூரி போதனா வைத்தியசாலை என்பதை சுகாதார அமைச்சு ஏற்றுக் கொள்ள மாட்டாது எனவும், அந்தக் கல்லூரி பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்லவென்றும் கூறினர்.

2011 ஏப்ரல் 5ம் திகதி 216.'.13ன் கீழ் சுகாதார அமைச்சு அறிவித்தலொன்றை விடுத்துள்ளது. ஷமாலபே SAITM நிறுவனம் மருத்துவர் பட்டங்களை வழங்குவதற்கு தகுதியான நிறுவனமல்ல என்றும், தான் அவ்வாறான அனுமதியொன்றை வழங்கவில்லையெனவும்' அதில் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு வர்த்தமானிக்கு மேல் வர்த்தமானியும், அறிக்கைக்கு மேல் அறிக்கைகளையும் விடுத்து குழப்பத்திற்குள்ளாக்கப்பட்ட நிலையில், கடந்த செப்டம்பர் 26ம் திகதி மீண்டும் ஓர் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலை உயர் கல்வி அமைச்சர் வெளியிட்டுள்ளார். அதன் மூலம் மாலபே பட்டதாரிப்



பட்டம் வழங்கும் கடை, இதுவரை பூர்த்தி செய்யாத குறிப்பிட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்ய மேலும் 6 மாத கால அவ-



# ம் விற்பனைக்கு




காசம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், ஆரம்பத்திலேயே மாலபே பட்டதாரிப் பட்டம் வழங்கும் கடையில் அனுமதிக்கப்பட்ட இரு மாணவர் குழுக்களுக்கு MBBS பட்டத்தை வழங்குவதற்கான சட்டபூர்வமான அங்கீகாரம் வழங்கப்பட்டுவிட்டது. இது விடயமாக எங்களோடு உரையாடிய ஒரு வழக்குரைஞர், இது எதிர்காலத்திற்குமான சட்ட அங்கீகாரம் எனக் கூறினார். ஆனால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படாமல் எதிர்காலத்திற்குமாக செல்லுபடியாகும் சட்டங்களை வர்த்தமானியின் மூலம் விதிக்க முடியாது. இலங்கை வரலாற்றில் அவ்வாறு எதிர்காலம் தொடர்பிலான சட்டங்கள், இரண்டு சந்தர்ப்பங்களில் மாத்திரமே விதிக்கப்பட்டுள்ளன. சிறிமாவோ பண்டாரநாயக அம்மையாரின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டபோது மற்றும் வெளிநாடுகளுக்கான போக்கு வரத்து தொடர்பிலான சட்டம் விதிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலேயேயாகும்.

இங்கு என்ன நடந்திருக்கிறது? ஒரு மருத்துவரை உருவாக்குவதற்கு எவ்வித தகுதியையும் பூர்த்தி செய்திராத மருத்துவர் பட்டம் வழங்கும் கடையொன்றின் மூலம் பல மருத்துவர்கள் பட்டம் பெற்று வெளியேறியுள்ளனர். மேலும் பல குழுக்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மஹிந்த ராஜபக்‘வின் அனுமதியோடும், அமைச்சர் எஸ்.பி. திசாநாயகவின் பொறுப்பிலும் ஒவ்வொரு முறையும் வெளிவரும் அதி விசேட வர்த்தமானியின் வாயிலாக இவை அனைத்தும் இனிதே நிறைவேறிக் கொண்டிருக்கின்றன.

## இந்த வர்த்தமானி அறிவித்தலை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம்

**மருத்துவர் நவீன் த சொய்சா**
**ஊடகத் தொடர்பாளர் அரச மருத்துவர் சபை**

அரசாங்கம் முதன்முதலில் இந்த நிறுவனத்திற்கு மாணவர்களை சேர்த்துக் கொண்டது. அப்போது வர்த்தமானி அறிவித்தல் வெளயிடப்பட்டிருக்கவில்லை. எந்த நிறுவனத்திற்கு அங்கீக்கப்பட்டிருக்கவில்லை. 2011 ஆகஸ்ட் 30ம் திகதிதான் முதலாவது வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. அந்த நேரத்திலேயே நாங்கள் எதிர்த்தோம். 5 நபர் குழுவொன்றை நியமித்தோம். மேற்படி நிறுவனம் மோசடியானதென அந்தக் குழு கூறியது. அதன் பிறகு இன்னொரு வர்த்தமானியை வெளியிட்டிருக்கிறார்கள். அரச மருத்துவர் சபை என்ற வகையில் நாங்கள், இந்த நிறுவனத்தை மட்டுமல்ல, வர்த்தமானி அறிவித்தலைக்கூட ஏற்றுக் கொள்ளமாட்டோம். ஏனென்றால் இப்படியான விடயங்கள் சம்பந்தமாக இலங்கை மருத்துவர் சபையின் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்படி எதுவுமே நடக்கவில்லை. அவ்வாறு வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தல்கள் குறித்து சந்தேகங்கள் எழுகின்றன. நாங்கள் இதனை ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

## முன்னாள் மருத்துவ மாணவர்கள் வழக்குத் தொடர்ந்தார்கள்

**சஜித் இந்திக**
**ஒருங்கிணைப்பாளர் மருத்துவ பீட மாணவர் செயற்பாட்டுக் குழு**

மாலபே SAITM நிறுவனம் சம்பந்தமாக அரசாங்கம் செப்டம்பர் 26ம் திகதி மீண்டுமொரு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது. அதன் மூலம் அந்த நிறுவனம் பட்டம் வழங்கும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதற்க முன்னர் 2011 ஆகஸ்ட 30ம் திகதி உயர் கல்வி அமைச்சரினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம், பட்டம் வழங்குவதற்கு எவ்வித தகுதியும் இல்லாத SAITM நிறுவனத்திற்கு பட்டம் வழங்கும் அதிகாரத்தை வழங்கியிருந்தது. அந்த வர்த்தமானி அறிவித்தலின் மூலம்தான் முதன்முதலாக கடனுக்கு பட்டம் வழங்கும் நிறுவனமொன்று நிறுவப்பட்டது. அதாவது 18 மாதங்களில் 8 நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் நிபந்தனையின் மீது SAITM நிறுவனத்திற்கு பட்டம் வழங்குவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டது. ஆனால் மேற்படி நிபந்தனைகளில் ஒன்றையாவது இதுவரை நிறைவேற்றவில்லை. இந்த SAITM நிறுவனம் காரணமாக இலவசக் கல்விக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இலவசக் கல்விக்காக ஒதுக்கீடுகளை செய்வதற்கு முடியாத நிலையில் மேற்படி நிறுவனத்தை கட்டியெழுப்புவதற்காக அரச வங்கியொன்று 600 மில்லியன் பணத்தை ஒதுக்கியுள்ளது. இதுவரை நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட மாணவ மாணவிகள் அங்கிருந்து வெளியேறி அந்த நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளார்கள்.

## கல்வியின் தரம் குறித்து பிரச்சினையாக மாறியுள்ளது

**சஞ்சீவ பண்டார- ஒருங்கிணைப்பாளர்**
**அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்**

இந்த புதிய வர்த்தமானி அறிவித்தல் இரகசியமாகவே வெளியிடப்பட்டது. எந்த இணையத்தளத்திலும், தபால் நிலையத்திலும் காணப்படவில்லை. SAITM நிறுவனத்திற்கு 8 நிபந்தனைகளை நிறைவேற்றும் வாக்குறுதியுடன் 2011 ஆகஸ்ட் 30ம் திகதிய வர்த்தமானி மூலம் பட்டம் வழங்குவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டது. இதுவரை அந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படவில்லை. இது குறித்து உயர் கல்வி அமைச்சர் அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டும். அதை விடுத்து ளுயுஐவுஆ நிறுவனத்திற்கு புனதத்தை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

வஞ்சகமான முறையில் நடாத்திச் செல்லப்படும் இந்த வியாபாரத்திற்கு மேற்படி வர்த்தமானி அறிவித்தலின் மூலம் புனிதத் தன்மை வழங்கப்பட்டுள்ளது.

# அறிவுக்கு வேலை கொடுப்போம்!

இன்று சமயங்களுக்கிடையில் மோதல்களும், விவாதங்களும், நடந்து கொண்டிருக்கின்றன. இந்த சமயங்களை உலகிற்கு தந்தவர்கள் இன்று உயிருடன் இருந்திருந்தால் இவற்றை ஒருபோதும் அனுமதித்திருக்கமாட்டார்கள். ஆனால் அவர்களைப் பின்பற்றும் மனிதர்கள் தமது மதத்திற்காக சண்டை பிடிக்கின்றார்கள், மோதிக் கொள்கிறார்கள், கொலை செய்து கொள்கிறார்கள். இவற்றையெல்லாம் பார்க்கும் ஒரு மனிதன் எந்த சமயத்தையும் சாராதிருப்பது எவ்வளவு நல்லது என்று நினைப்பது தவறாக இருக்காது.

உண்மையிலேயே இந்த மோதல்களுக்கு என்ன காரணம்? மனிதர்கள் புத்திக்கு இடமளிப்பதை விட்டுவிட்டு உணர்வுகளுக்கு இடமளிக்கத் தொடங்கிவிட்டார்கள். அதனால்தான் இவ்வாறான மோதல்கள் உருவாகின்றன. இன்று பெரும்பாலான மக்கள் சமயம் சார்ந்தவர்களாக இருப்பதற்குக் காரணம் மரபுவழிதான். பெற்றோர்களிடமிருந்து தமக்குக் கிடைத்த சமயம் தொடர்பில் ஓரளவு விளக்கத்தைப் பெற்றுக் கொண்டு, ஏனைய மதங்கள் தனது மதத்தைவிட கீழ்நிலையில் இருப்பதற்கான காரணத்தை தேடிக்கொள்கிறார்கள். ஒரு முஸ்லிம் நினைக்கிறார் தான் பின்பற்றும் மதம்தான் உலகிலேயே சிறந்த மதம் என்று. பௌத்த சமயத்தை பின்பற்றுபவர் நினைக்கிறார் தான் பின்பற்றும் மார்க்கம்தான் உலகிலேயே சிறந்த மார்க்கமென்று. கிறிஸ்தவர் நினைக்கிறார் யேசுநாதர்தான் நித்திய ஜீவன் என்று. ஒரு இந்து நினைக்கிறார் அவர் பின்பற்றும் சமயம்தான் உலகிலேயே உயர்ந்த சமயமென்று, இவர்கள் அனைவரும் உணர்வுகளுக்கு முக்கியத்துவமளிப்பவர்களேயன்றி அறிவுக்கு முக்கியத்துவமளிப்பவரிகளல்ல. இவர்களில் எவராவது தன்னுடைய சமயத்தைப் பற்றி ஓரளவு அறிந்து வைத்திருந்தாலும், ஏனைய சமயங்களைப் பற்றிய அறிவு அவர்களிடம் கிஞ்சித்தும் கிடையாது.

சிலர் தமது சமயத்தை விட்டு வேறு சமயத்தை தழுவிக்கொள்வதும் ஏதோ ஓர் உணர்வுபூர்வமான காரணத்தால்தான். பௌத்தராக இருந்த ஒருவர் கிறித்தவ சமயத்தைத் தழுவிய பின்னர், தான் நோய்வாய்ப்பட்டதும் தன்னை யேசுபிரான் சுகப்படுத்தியதாக கூறுகிறார். நோயிலிருந்து சுகமடைவது ஒரு சமயத்தை விட்டு இன்னொரு சமயத்தைத் தழுவுதற்கு நியாயமான காரணமாக இருக்க முடியாது. இதனை ஆராய்ந்து பார்த்தால் அங்கே யேசுபிரானின் தலையீடு எதுவும் கிடையாது. இவர் அறிவுக்கு வேலை கொடுக்கவில்லை. உணர்வுகளுக்கே வேலை கொடுத்துள்ளார் என்பது இதிலிருந்து தெரிகிறது.. வேறு சமயமொன்றிலிருந்து பௌத்தத்தை தழுவிய ஒருவரும், இஸ்லாமிய சமயத்தை தழுவிய ஒருவரும் அதற்கான காரணத்தை தேடிக்கொள்கிறார்கள். இவை அறிவுக்கு முதலிடத்தை கொடுக்கக் கூடிய காரணங்களல்ல, உணர்வுக்கு முதலிடத்தைக் கொடுக்கக் கூடிய காரணங்களாக இருப்பதை அவர்கள் உணர்வதில்லை.

எந்தவிதமான அறிவும் இல்லாமல் வெறுமனே உணர்வுகளின் மீது செயற்படும் இப்படியானவர்களை மிக இலகுவாக இனவாத மதவாத வலைகளில் சிக்க வைக்க முடியும். இவர்களை பயன்படுத்துவதற்கு அவர்களது உணர்வுகளை தட்டிவிட்டாலே போதும் கொந்தளித்து விடுவார்கள். கடந்த காலங்களில் மத அடிப்படைவாதிகள் இலங்கை மக்கள் மத்தியில் தோற்றுவித்த பிரச்சினைகளைப் பார்க்குமிடத்தும், அவர்களது உரைகளைப் பார்க்குமிடத்தும் அவர்கள் மனிதர்களின் அறிவுக்கு பேசினார்களா என்றால் அதுதான் இல்லை. உணர்வுகளுக்கே பேசினார்கள். மனிதர்களின் உணர்வுகளை தட்டியெழுப்பியவர்கள், அதற்காக மதவாதத்தை கையிலெடுத்தவர்கள் இப்போது காணாமல் போய்க் கொண்டிருக்கிறார்கள் தூண்டப்பட்டவர்கள் பாமர மக்கள் மத்தியில் இனவாத மதவாத குரோதங்களை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்து எமக்கு ஓர் எதார்த்தம் புரிகிறது. என்னவென்றால், மக்களின் உணர்வுகளை தூண்டிவிட்டு தங்களது எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டவர்களின் வெற்றி சிறிது காலத்திற்கே நிலைத்திருக்கும் என்பது. தான். அவர்கள் உணர்வுகளை தூண்டுவதை நிறுத்திவிட்டால் எல்லாமே நின்றுவிடும்.. எனவே அவர்கள் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமாயின் தொடர்ந்தும் உணர்வலைகளை தூ ண்டிக் கொண்டே இருக்க வேண்டும். அடிப்படைவாதிகள் பாமர மக்களின் உணர்வலைகளை தூண்டுவதற்கு முயலும்போது மக்கள் தமது அறிவுக்கு வேலை கொடுத்து அவற்றைத் தோற்கடிக்க முன்வர வேண்டும். சமயங்களை ஒரு பக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இனவாதிகளையும் மதவாதிகளையும் விரட்டியடிக்க முன்வர வேண்டும்.

உணர்வுகளுக்கு அடிமையாகக் கூடிய ஒருவரை தூண்டி விடுவதற்கு மதச் சின்னமோ காவி உடையோ மாத்திரம் போதும்.

இப்படியானவர்கள் தமது மத குரு கூறும் அனைத்தையும் சமய போதனைகளாகவே ஏற்றுக் கொள்கின்றார்கள். இன்று ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளில் பொது மக்களை சாகடித்துக் கொண்டு சாகும் குண்டுதாரிகள் இருப்பதும், பர்மாவில் முஸ்லிம் மக்களை கொன்று விரட்டியடிப்பதும், இலங்கையில் இஸ்லாமிய மற்றும் கிறித்தவ பள்ளிகளை உடைப்பதும், ஹிந்து கோவில்களை உடைப்பதும் இவ்வாறு மத குருமார்கள் கூறும் அனைத்தையும் சமய போதனைகள் தானென தலைமேற்கொண்டு உணர்வுகளுக்கு முதலிடமளிக்கும் மனிதர்களாலேயே நடக்கின்றனவே அல்லாது அறிவுக்கு முதலிடம் கொடுக்கும் மனிதர்களால் அப்படியான காரியங்களில் ஈடுபட முடியாது. ஆனால், துரதிர்ஸ்டவசமாக அவர்களுக்கு தமது தவறுகள் புரிவதில்லை. இதனை புரிய வைக்க மத குருமார்களும் விரும்புவதில்லை. உண்மை புரிந்துவிட்டால் அவர்களது பேச்சு எடுபடாது என்பது அவர்களுக்கே தெரியும் மத குருமார்கள் பக்தர்களைவிடவும் உணர்வுபூர்வமானவர்கள். அதனால்தான் மாடுகளுக்காக தீக்குளிக்கிறார்கள்.

அரசியல்வாதிகளுக்காக தீக்குளிக்கிறார்கள்: கூத்தாடிகளுக்காக தீக்குளிக்கிறாமர்கள்: தலைவர்களுக்காக தீக்குளிக்கிறார்கள்: மாடுகளுக்காக தீக்குளிக்கிறார்கள்


"மதம் மனிதனுக்குப் பிடித்தாலும், யானைக்குப் பிடித்தாலும் ஆபத்து ஆபத்துதான். மதக் காரணங்களுக்காக மனித ரத்தம் சிந்தப்பட்டதைப் போல் வேறு எந்தக் காரணங்களுக்காகவும்

சிந்தப்பட்டதில்லை என்பது சரியான கணிப்புதான்

இந்தியாவில் 450 கால வரலாறு படைத்த பாபர் மசூதியை இடித்தவர்கள் மதம் பிடித்தவர்கள்தானே? குஜராத்தில் ஈராயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டதன் பின்னணியில் இருந்ததும் மதவெறிதானே!

ஒரு மதத்துக்குள்ளிருக்கும் பிரிவுகளுக்கு மத்தியிலும் கலவரங்கள் நடந்ததுண்டு நடப்பதுண்டு.

ஈராக்கில் சதாம் ஹுசைன் தூக்கிலிடப்பட்டதை முஸ்லிம்களில் ஒரு பிரிவினர் கொண்டாட்டம் போட்டதும், ஒரு பிரிவினர் எதிர்ப்பு காட்டியதும் அந்த வகையில்தான்".





# ஈராக் வரிசையில் சிரியா போருக்கு அழைக்கப்படுகிறது




கம்யூனிசப் பூதம், அது சோவியத் ரசியாவினாலும் சீனாவினாலும் பரவவிடப்பட்டு உலகத்தை அச்சுறுத்துகிறது. அதனை பரவவிடாமல் ஒழிப்பதே எமது வெளியுறவுக் கொள்கை என முழங்கியவர் ஐசன்ஹவர் என்கின்ற அமெரிக்க அதிபர். அவர் இலனொய் என்கிற அமெரிக்க மாநிலம் ஒன்றில் கூடியிருந்தோர் மத்தியில் வியட்நாம் யுத்தம் பற்றிக் கருத்துக் கூறியபோது

மேற்குலக வெள்ளையர்கள் தான் தமது எதிரிகள் என ஆசியர்கள் உணர்வதை நாங்கள் விரும்பவில்லை. போர் நடக்குமாயின் ஆசியர்களுக்கு எதிராக ஆசியர்களே தமக்குள் மோதிக் கொள்வதாக இருக்கட்டும். அதில் எமது ஆதரவு சுதந்திரத்துக்கான பக்கத்துக்கு. என்றார்.

இதன் உள்ளார்ந்த அர்த்தம், நேரிடையான போரை அமெரிக்கா தொடுப்பதால் அமெரிக்க மற்றும் மேற்குலக நிகழ்ச்சிநிரலுக்காகவே போர் நடக்கின்றது என்பதையும் எனவே எதிரி யார் என்பதையும் ஆசியர்கள் கண்டுகொண்டு விடுவார்கள். எனவே உள்நாட்டில் உருவாக்கிவிடப்படும் மறைமுக ஆதரவுக் குழுக்களை ஊட்டி வளர்ப்பதன் மூலம் உள்நாட்டுப் போரே நடக்கிறது. உள்நாட்டு முரணில் தான் மோதுகிறார்கள் என்று போக்குக்காட்டி விடுவது மட்டுமல்லாமல் போரின் பின்னான உண்மையான பங்காளி- சூத்திரதாரி தனது இழப்புகளைக் கூட மற்றவன் தலையில் கட்டிவிட்டு அமெரிக்க போர்வீரனின் உயிர்ச்சேதத்தை தவிர்க்கிறான். அவ்வாறான சிப்பாய் உயிரிழப்புகளால் அமெரிக்க மக்கள் மத்தியில் எழக்கூடிய எதிர்ப்பலைகளுக்கு முகம் கொடுப்பதையும் தவிர்க்கிறான். இவ்வளவும் அன்றைய அமெரிக்க அதிபர் ஐசன்ஹவர் கருத்துக்குள் அடங்கியிருப்பவை.

அன்றைய வியட்நாம் போரில் அமெரிக்கா சிக்கிக்கொண்டு பின்னர் பொய்கள் வெளிச்சத்துக்கு வர வெளியேறினார்கள்.

பழைய வரலாறுகளைப் புரட்டித்தான் அறிந்துகொள்ள வேண்டிய தேவையின்றி, நாம் வாழும் சமகாலத்திலேயே அல்கைதாவை உள்நாடுகளுக்குள் அழிவுப்படையாகவும் அன்றைய சோவியத் படைகளுக்கு எதிராகவும் அமெரிக்காவே தானே உருவாக்கி தனது நிகழ்ச்சிநிரலுக்காக மோதவிட்டது இந்த மேற்சொன்ன ஐசன்ஹவரின் தந்திரோபாயத்தின் அடிப்படையில் தான். தேவை முடிந்தபின்னர் அவர்களை ஓடி ஒளிந்துகொள்ள விட்டுவிட்டு, முரணான நிலைகள் எழுந்தபோது, இரட்டைக் கோபுர தகர்ப்புக்குப் பின்னால் அல்கைதாவை பயங்கரவாதிகளாக உலக அரங்கில் முன்நிறுத்தி, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் என அந்நாடுகளது இறைமைகளை மீறி உள் நுழைந்து அல்கைதாவை தேடி அழிக்கிறோம் என்ற போர்வையில் தமது சார்பு ஆட்சிகளை நிலைநாட்டி

> **மேற்குலக போர்க் கூட்டாளிகளில் ஒன்றான பிரிட்டன் சிரியாவின் மேலான யுத்தத்துக்கு பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடாத்தியதில் பெரும்பான்மை இன்றி தோற்றுப்போயுள்ளது.**

வருகிறார்கள்.

பேரழிவு ஆயதங்களை ஈராக் -சதாம் குசைன் தன் கைவசம் வைத்திருக்கின்றார் என்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன என்ற ஒரே பொய்யையே மீண்டும் மீண்டும் உரக்க கூவிய போர் வெறியன் முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஃ, எண்ணெய் வளத்தைக் கட்டுப்படுத்தும் உண்மையான நோக்கத்தை மூடிமறைத்து செய்த அழிவு யுத்தம் நமது கண் முன்னேயே நடாத்தப்பட்டது. பிரிட்டன் மற்றும் மேற்குலக நாடுகளின் துணையுடன் பொய்களை வாரியிறைத்து நடாத்தப்பட்டதே ஈராக் யுத்தம்.

இந்த வரிசையில் சிரியாவில் இன்றோ நாளையோ யுத்தம் தொடுக்க தயாராகிக் கொண்டிருக்கும் அமெரிக்கா முன்வைத்திருக்கும் குற்றச்சாட்டு, சிரிய தலைநகர் டமாஸ்காஸில் தனது சொந்த மக்கள் மீது இரசாயன ஆயுதங்களை பாவித்து கொல்வதற்கு சிரிய அதிபர் அல் பசார் அசாத் கட்டளையிட்டார் என்பதாகும். இரசாயனத் தாக்குதலில் 400 குழந்தைகள் உள்ளடங்கலாக 1500 சிரிய மக்கள் கொல்லப்பட்டனர்.

அதிபர் அல் பசார் அசாத், சிரிய நாட்டை 50 வருடங்களாக கட்டுப்பாட்டுக்குள் வைத்து ஆளுகின்ற பாத் கட்சியின் சர்வாதிகார அதிபராக இன்றிருப்பவர். இவரது மக்கள் மீதான சர்வாதிகாரப்பிடியானது கொடியது கொடூரமானது. மதச் சார்பின்மை என்றபோதும் தனது சொந்த மக்களை அடக்கியொடுக்குகின்ற அரசாகவே அது இதுநாள் வரையும் இருந்து வந்தது. வருகின்றது.

சிரிய அரசோ தனக்கு எதிராக கிளர்ச்சிப் போர் நடாத்தும் அமெரிக்க சார்பு சுதந்திர சிரிய இராணுவம் தான் இரசாயனத் தாக்குதலை நடாத்தியுள்ளது என பதிலுக்கு குற்றம் சாட்டுகின்றது. தனது நாட்டிற்குள் ஐக்கிய நாடுகளின் ஆயுதப் பரிசோதனை நிபுணர்கள் இருக்கின்ற வேளையிலேயே இரசாயன ஆயுதங்களை சிரியா ஏவி இருக்குமா என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. இருந்த போதும் இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்பட்ட இடத்தில் தடயங்கள் சேகரித்து உண்மை நிலையறிய ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுத நிபுணர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஈராக்கில் நடாத்தப்பட்ட அதே போன்ற கூத்துக்கள் தான் இன்று சிரியாவிலும் அரங்கேற்றப்படுகின்றன.

சிரிய அரசினை எதிர்க்கின்ற தேசிய இராணுவம், மத அடிப்படைவாத முஸ்லீம் சகோதரத்துவக் கட்சி, மற்றும் அமெரிக்க அரசு, தனதும் உலகினதும் எதிரியாகக் காட்டி அழிக்க முனையும் பயங்கரவாத அல்கைதா போன்ற அமைப்புக்கள் சிரிய அரசுக்கு எதிராக இன்று அமெரிக்காவால் ஆதரிக்கப்படுகின்றன. இஸ்லாமிய கிளர்ச்சிக் குழுக்களுக்கு போர் செய்வதற்கான விநியோகத்தினை வழங்குவதில் சவுதி அரேபியா மற்றும் கட்டார் நாடுகள் பின்னணியிலுள்ளன என்பது குறிக்கப்பட வேண்டியது. எண்ணெய் வளம் என்ற ஒன்றையே பிரதானமாகக் கருதும் அமெரிக்கா, சிரியாவின் மீது தொடுக்க நினைக்கும் போருக்கு இரசாயன ஆயுதப் பாவனையே தான் காரணம் என்று இறந்துபட்ட சிரிய மக்களைக் கூறி கரிசனையில் கண்ணீர் வடிக்கின்றது. எண்ணெய் வளத்தைக் கொண்டிருக்கின்றது என்பதைக் கணக்கில் வைத்து சிரியாவின் பிடரியை பிடித்து நொருக்கி எண்ணெய் வளத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் உத்தரவாதப்படுத்துவது என்பது அமெரிக்க போர் வெறியன் இனது அன்றைய திட்டம். இந்த இரசாயனத் தாக்குதல் கொடுமைக்கு பொறுப்பான சிரிய அரசு தண்டிக்கப்பட வேண்டும் என்கிறார் இன்றைய ஒபாமா.

பொய்யையே கூறி எண்ணெய்யை குறியாக வைத்து ஈராக் மக்களைக் கொன்றழித்த தனது முன்னைநாள் அமெரிக்க அதிபருக்கு என்ன தண்டனை என்பதை முதலில் அமெரிக்கா சொல்ல வேண்டாமா?

மேற்குலக போர்க் கூட்டாளிகளில் ஒன்றான பிரிட்டன் சிரியாவின் மேலான யுத்தத்துக்கு பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடாத்தியதில் பெரும்பான்மை இன்றி தோற்றுப்போயுள்ளது.

ருசிய அனுசரணையுடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் சிரியாவிற்குள் காணப்படும் இரசாயன ஆயுதங்கள் அனைத்தும் ஒன்றரை வருட காலக்கெடுவுக்குள் அழிக்கப்படுவதற்கு சிரியா ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என விதித்திருக்கின்றது. சிரிய அரசு இதற்கு திருப்திகரமான முறையில் ஒத்துழைக்கத் தவறும் பட்சத்தில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தனது அதிகாரத்தை சிரியா மீது பிரயோகிக்கும் என அவ் ஒப்பந்தம் வலியுறுத்துகிறது. இரண்டு வருடங்களுக்கு மேலாக நீடித்த இந்த உள்நாட்டுப் போரில் ஒரு இலட்சம் மட்டில் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். தமக்குச் சார்பான ஒரு அரசு மாற்றத்தை எதிர்பார்த்து காய்களை நகர்த்தித் தருணம் பார்த்து போர் அறிவிப்பை விடுத்த அமெரிக்க மற்றும் மேற்குலக நாடுகள் இந்த ஒப்பந்தத்தினை மதிக்க வேண்டும் என்ற கட்டாயங்கள் கிடையாது. சந்தர்ப்பங்களுக்காய் கழுகுகளாய் அவர்கள் காத்திருப்பார்கள்.

# கென்யா ஆடம்பர வியாபார மாளிகை தாக்குதலும் அமெரிக்காவின் அச்சமூட்டும் நடவடிக்கையும்

கென்யாவின் தலைநகர் நைரோபியில் உள்ள வெஸ்ட்கேட் (Westgate) ஆடம்பர வியாபார மாளிகையினுள் புகுந்த அல்- சபாப் (al-Shabab) என்னும் சோமாலிய ஆயுதக்குழுவினர் கடந்த மாதம் 21ம் திகதி தாக்குதல் ஒன்றினை மேற்கொண்டனர். இத்தாக்குதல் மூன்று நாட்களாக நீடித்ததுடன் பல உயிரிழப்புக்கள் கட்டிட தகர்ப்புகளின் பின்னர் சரணடைவுடன் முடிவுக்கு வந்தது.

அல்கைதாவுடன் தொடர்புடையதாக கூறப்படுகின்ற அல்-சபாப் (al-Shabab) இயக்கத்தினர் சோமாலியாவில் தமது அமைப்பின் மேல் கென்யா இராணுவம் நடாத்தும் தாக்குதலுக்கு பதிலடியாகவே இந்த தாக்குதலை தாம் மேற்கொண்டதாக அறிவித்துள்ளது.

இந்த வெஸ்ட்கேட் ஆடம்பர வியாபார மாளிகை இஸ்ரேலிய நாட்டு பெரும் பணக்காரர்களுக்கு சொந்தமானது. இதனை காரணம் காட்டி இஸ்ரேலிய விசேட இராணுவமும் அல்கைதாவுடன் தொடர்பு உள்ளவர்களின் இஸ்லாமிய பயங்கரவாதம் எனக் கூறிக் கொண்டு சர்வதேச பொலீஸான அமெரிக்க இராணுவத்தின் விசேட படைப்பிரிவொன்றும் இந்த முறியடிப்பு தாக்குதலில் பங்கு பற்றியதனை இவர்களால் காப்பாற்றப்பட்டு தப்பி வந்த பலர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளனர். இந்த முற்றுகைத் தாக்குதலை முறியடிக்க கென்யாவின் இராணுவத்துடன் இஸ்ரேலிய விசேட இராணுவமும் பங்குபற்றியிருந்ததாக மேற்குலக பத்திரிகைகள் எழுதியுள்ளதுடன் புகைப்படங்களையும் பிரசுரித்துள்ளன. ஆனால் கென்யாவிற்கான அமெரிக்க தூதுவரோ தாம் தொழில் நுட்ப மற்றும் ஆயுத உதவிகள் புரிந்ததாக தெரிவித்துள்ளார்.

அல்-சபாப் என்பதன் அர்த்தம் அராபிய இளைஞர்கள் என்பதாகும். இந்த அல்-சபாப் அமைப்பு 2006ம் ஆண்டு அடிப்படைவாத இஸ்லாமிய நீதிமன்ற அமைப்பின் ( Somalia's now-defunct Union of Islamic Courts ) இளையோர் அமைப்பாக உருவாக்கப்பட்டது. இதில் ஏறத்தாழ 9000 ஆயுதப்பயிற்சி பெற்றவர்கள் இருக்கின்றார்கள். ஆரம்பத்தில் சோமாலியாவில் இருந்த பலவீனமான அரசினை பாதுகாக்க வந்திருந்த எதியோப்பிய இராணுவத்திற்கு எதிராக தமது முதல் ஆயுதப் போராட்டத்தினை ஆரம்பித்தனர். இவர்கள் சோமாலியாவின் பெருநகரங்கள் கிராமங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்து உத்தியோகப்பற்றற்ற ஆட்சியினை நடாத்திக் கொண்டிருந்தனர். இவர்களிற்கும் அல்கைதா அமைப்பினருக்கும் தொடர்பு இருப்பதாக கூறி அமெரிக்கா இங்கிலாந்து அரசுகள் பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இந்த அமைப்பினை வைத்துள்ளனர்.

2011 ம் ஆண்டு ஆபிரிக்கா யுனியன் சோமாலிய அரச படைகளிற்கு ஆதரவாக சோமாலியாவிற்குள் நுழைந்து இவர்கள் மீது தாக்குதல்களை தொடுத்து. இவர்களின் கட்டுப்பாட்டிலிருந்த பெரு நகரங்களையும் துறைமுகங்களையும் மீட்டெடுத்து 2012 இல் தொலைதூர கிராமங்களிற்கு விரட்டி அடித்துள்ளது. இந்த ஆபிரிக்க யுனியன் படையில் கென்யாவின் இராணுவம் முக்கிய பாத்திரத்தினை வகித்ததுடன் இப்போதும் சோமாலியாவில் 4000 இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

தமது நாட்டு சுற்றுலா பயணிகள் மேலும் இராணுவத்தின் மீதும் அல்-சபாப் தாக்குதல் நடாத்துவதாக காரணம் காட்டி தமது பாதுகாப்பிற்காகவே சோமாலியாவில் ராணுவத்தினை நிறுத்தியுள்ளதாக கென்யா கூறுகின்றது.

பின்லாடனினால் ஆரம்பிக்கப்பட்ட அல்கைதா அமைப்பிற்கு அமெரிக்க அரசும் பிரித்தானிய அரசும் ராணுவப் பயிற்சி அளித்தது ஆயுதங்களை வழங்கி ஆப்கானிஸ்தானில் ரசிய ஆக்கிரமிப்புக்கு




எதிராக போராட சகல உதவிகளையும் மேற்குலகத்துடன் இணைந்து வழங்கியிருந்தது அனைவரும் அறிந்ததே. பின்னர் சர்வதேச நிலைமைகள் மாற்றமடைய அல்கைதா இஸ்லாமிய அடிப்படை பழமைவாதத்தினை முன்னிறுத்தி மேற்கிற்கு எதிராக இயங்க ஆரம்பித்து மேற்கின் நிலைகள் மீது பல தாக்குதல்களை தொடுத்ததுடன் உலகில் இருக்கின்ற முஸ்லீம் அடிப்படைவாத அமைப்புக்கள் மற்றும் குழுக்களுடன் தொடர்புகளை பேணி மேற்கிற்கு எதிராக பல முனைகளில் தாக்குதல்களை நடாத்துகின்றது.

அமெரிக்காவும் ஐரோப்பாவும் ஆப்கான்,பாக்கிஸ்தான்,ஈராக் என பல நாடுகளில் நேரடியாக அல்கைதாவுடன் மோதலில் ஈடுபடும் அதேவேளை அண்மையில் அரபு நாடுகளில் எழுந்து வருகின்ற மக்கள் எழுச்சிகளை கண்டு அஞ்சி அவற்றினை மழுங்கடிப்பதற்காக ஆயுதக்குழுக்களை உருவாக்கியும் அங்கு ஏற்கனவே இருக்கின்ற அல்கைதா அமைப்பினருக்கு ஆயுதங்களை அள்ளி கொடுத்தும் வருகின்றது. இதனை லிபியாவிலும் எகிப்திலும் வெளிப்படையாக காணக்கூடியதாக இருந்தது. இது குறித்து ஐரோப்பிய நாடுகளின் பாராளுமன்றங்களில் அரசியல்வாதிகள் தங்கள் நாடுகளின் அரசுகளின் இந்த இரட்டை நிலைப்பாடு குறித்து கேள்விகளை எழுப்பியுள்ளனர்..

இன்றைய நவகாலனித்துவத்தில் மக்கள் தமது உழைப்பினையும் நாட்டின் வளங்களையும் கொள்ளை இடும் பெரும் வல்லரசு நாடுகள் மீது சினம் கொண்டுள்ளதுடன் எதிர்ப்புக்களை தம்மால் முடிந்த அளவில் காட்டி வருகின்றனர். இந்த மக்கள் ஒன்றிணைந்து பெரும் எழுச்சி அடைந்து தமக்கு எதிராக பலமான போராட்டத்தினை முன்னெடுப்பதனை தடுக்கும் வண்ணமும் தமது நலன்களிற்கு மசியாத அரசுகளை அடிபணிய வைக்கவும் ஆயுதக்குழுக்கள் தோன்றுவதை தமது

**"மதம் ஒரு அபின் என கார்ல்ஸ் மாக்ஸ் மதம் பற்றி குறிப்பிட்டுள்ளார். அல்கைதா போன்ற மத அடிப்படைவாத அமைப்புகள் படுமோசமான பிற்போக்குவாதமானவை. இவை மதத்தின் பேரால் மக்கள் மத்தியில் வன்முறையினை தூண்டி வளர்த்து பிழையான வழிகளில் மக்களை திசை திருப்புவதுடன் மக்களின் உண்மையான எதிரிகளான ஆளும் வர்க்கத்தினை பாதுகாத்து நிற்கின்றன."**

முகவர்கள் ஊடாக ஊக்குவிப்பதுடன் ஆயுத தரகர்கள் மூலம் தமது ஆயுதங்களை விற்பனை செய்து மக்கள் மயப்படுத்தப்படாத போராட்டங்களை வளர்ப்பதும் தமது தேவையும் நோக்கமும் நிறைவேறியவுடன் பயங்கரவாத முத்திரை குத்தி அழிப்பதுமே இன்றைய போக்காக இருக்கின்றது.

கென்யா ஆடம்பர வியாபார மாளிகை தாக்குதலை முறியடிக்க இஸ்ரேலும்,அமெரிக்காவும் தமது சிறப்புப்படைகளை ஈடுபடுத்தியது என்பது எதிர்வரும் காலங்களில் எந்த ஒரு நவகாலனித்துவ நாட்டிலும் மேற்கத்தைய மூலதனங்களிற்கும் சுரண்டல்களிற்கும் மக்களின் எதிர்ப்புகள் இடையூறுகள் அச்சுறுத்தல்கள் ஏற்படுமிடத்து அவற்றினை பாதுகாப்பதற்கும் உள்ளூர்களில் உள்ள தமது நலன் பேணும் அரசுகள் மற்றும் முகவர்கள் அடிவருடிகளை பாதுகாக்க வல்லரசுகளின் இராணுவம் எப்போதும் தயார் நிலையில் உள்ளது என்ற அச்சமூட்டும் செய்தியே!

மறுபுறத்தில் ஏகாதிபத்திய மற்றும் உள்நாட்டு ஆளும் வர்க்கத்தினருக்கு எதிராக போராட வேண்டிய மக்கள் இனம் மதம் மொழி என பல்வேறு பிரிவுகளாக பிரிந்து நின்று தமக்குள் மோதிக் கொண்டிருக்கின்றனர்.

இதனை ஏகாதிபத்தியங்களும் உள்நாட்டு ஆளும் வர்க்கத்தினரும் ஊக்குவிப்பதுடன் ஆயுதங்களை வழங்கி பிரிந்து நிற்கும் மக்களிடையே மோதல்களை உருவாக்கி இந்த மக்கள் தமக்கு எதிராக திரும்பா வண்ணம் பார்த்துக் கொள்கின்றன.

மதம் ஒரு அபின் என கார்ல்ஸ் மாக்ஸ் மதம் பற்றி குறிப்பிட்டுள்ளார். அல்கைதா போன்ற மத அடிப்படைவாத அமைப்புகள் படுமோசமான பிற்போக்குவாதமானவை. இவை மதத்தின் பேரால் மக்கள் மத்தியில் வன்முறையினை தூண்டி வளர்த்து பிழையான வழிகளில் மக்களை திசை திருப்புவதுடன் மக்களின் உண்மையான எதிரிகளான ஆளும் வர்க்கத்தினை பாதுகாத்து நிற்கின்றன.

எமது நாட்டில் ஏகாதிபத்தியங்களும் இந்திய ஆளும் வர்க்கமும் ஒன்றிணைந்து தமிழ் இளைஞர்களிற்கு ஆயுதங்கள் பயிற்சிகள் வழங்கி சிங்கள முஸ்லீம் சாதாரண பொது மக்களின் மீதான படுகொலைகளை ஊக்குவித்ததும் மக்கள் மயப்படாத ஆயுதப் போராட்டத்தினை முன்னெடுக்க வைத்து இலங்கை அரசினை தமக்கு அடிபணிய வைத்த பின்னர் மக்களையும் புலிகளையும் படுகொலை புரிந்ததும் இலங்கை அரசு தமிழ் சிங்கள முஸ்லீம் மக்கள் இனம் மதம் மொழி வேறுபாடுகளை களைந்து ஒன்றிணைந்து தமக்கெதிராக போராடாதிருப்பதற்காக பொதுபலசேனா சிங்களராவய போன்ற அமைப்புக்களை தானே நிதி பாதுகாப்பு போன்ற உதவிகளை செய்து வளர்த்து வருகின்றது.

மக்கள் தமது துன்பங்களிலும் துயரிலும் வறுமையிலும் இருந்து விடுதலை பெற வேண்டுமாயின் முதலில் தம்மை பிரித்து வைத்திருக்கும் இனவாதம் மதவாதம் பிரதேசவாதம் போன்றவற்றிற்கு எதிராக உறுதியான போராட்டம் ஒன்றினை முன்னெடுப்பது அவசிமாகும்.

# இந்தியக் கடற்கொள்ளையும் இலங்கையில் கடல்வள அழிவும்

கடந்த ஐப்பசி மாதத்தில் மட்டும் 78 இந்திய மீனவர்கள், இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

78 தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்பட்டதானது யுத்தத்துக்கு பின் வந்த காலத்தில் நடந்த கைதுகளில் மிக அதிகமானதாகும் இலங்கைக்குச் சொந்தமான விசேட பொருளாதார கடல் வலயத்தில், சர்வதேச சட்ட அடிப்படைக்கு முரணாக, நடாத்தப்படும் இந்த கடல்வளக் கொள்ளையானது, தற்போது 2009 இக்கு முன்னிருந்த நிலையை விட அதிகரித்துள்ளது.

இன்று இலங்கை கடல்வலயத்தில் அத்துமீறல் செய்து நம் தேசத்தின் கடல்வளத்தை சூறையாடி, இயற்கை அழிவிற்கு வழிவகுக்கும் இந்தியக் கரையோர பிரதேசங்கள் பற்றி பார்ப்போமாயின், மன்னார் வளைகுடாவுக்கு வடக்கிலும், வங்காள விரிகுடாவுக்கும் இடைப்பட்ட புவியடி தளமேடையில், நாகப்பட்டினம் வடக்கிலிருந்து ராமேஸ்வரம் தெற்கு வரையாக கிட்டத்தட்ட 480 கீலோமீற்றர் கரையோர பிரதேசத்தில் வசிக்கும் மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இது தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த கரையோர பிரதேசத்தில் கிட்டத்தட்ட 43 சதவீதமாகும்.

அத்துடன் 2002 ஆம் ஆண்டு இந்திய அரசின் கணக்கெடுப்பின்படி நாகப்பட்டினத்தில் 1465 றோலர்களும், தஞ்சாவூரில் 469 ரோலர்களும், புதுக்கோட்டையில் 866 றோலர்களும், இராமநாதபுரத்தை சேர்ந்த 1865 றோலர்களில் 980 றோலர்களும் (மீதமானவை மன்னார் வளைகுடாவில் தொழில் செய்கின்றனர்), அதாவது மொத்தமாக 3780 இந்திய றோலர்கள் பாக்குநீரிணைப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளன. இத்தகவல் 2002 ஆம் ஆண்டை சேர்ந்தது. உறுதிப்படுத்தப்படாத தகவல்களின் அடிப்படையில் கிட்டத்தட்ட 8500 இந்திய றோலர்கள் தற்போது இப்பகுதில் மீன்பிடியில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகிறது. இத்தகவல் அடிப்படையில் நம்பகத்தன்மை கொண்டதாகவே உள்ளது. காரணம், தென் இந்திய மீன்பிடிசார் வெளிநாட்டு ஏற்றுமதியும், முதலீடும் கடந்த பத்து வருடங்களில் பல நூறு மடங்கு அதிகரித்துள்ளது .

தமிழ்நாட்டின் மீன்பிடி உற்பத்தித்திறன் இன்று கேரளா, குஜராத்திற்கு அடுத்ததாக இந்திய அளவில் மூன்றாம் இடத்தில் உள்ளது. 2008 ஆம் ஆண்டின் தமிழ்நாட்டின் மீன் உற்பத்தி 3,93,266.30 தொன்களாகும். இதில் 72644 தொன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு 18.3 பில்லியன் (அல்லது 18131.4 மில்லியன்)இந்திய 'ரூபாய்கள் வருமானமாக பெறப்பட்டுள்ளது. இது சர்வதேச நாடுகளுக்கான ஏற்றுமதியால் பெறப்பட்ட வருமானம் மட்டுமே. உள்நாட்டு சந்தைப்படுத்தலால் பெறப்படும் வருமானம் இதைவிட அதிகமானது. இவ்வருமானத்தை ஈட்டும் மீன்பிடி உற்பத்தியின் பெரும்பகுதி இலங்கையின் விசேட பொருளாதரா கடல் வலயத்திலேயே பிடிக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் இன்று தமிழ்நாட்டின் மீன்பிடியானது செல்வம் கொழிக்கும் தொழிலாக இருக்கிறது. இதனாலேயே இன்று தென் இந்திய மீன்பிடி இத்தொழில் சார் மூலதனம், சர்வதேச

மற்றும் இந்திய கோடீஸ்வர முதலாளிகளுக்கும், பாரிய மீன் ஏற்றுமதி கொம்பனிகளுக்கும் சொந்தமானதாகும். பாரம்பரிய தென் இந்திய மீனவர்கள் இம் மூலதனத்தின் கூலிகளாகவே வேலை செய்கின்றனர். இவர்களே 2010 இக்கு முன்பு இலங்கை அரச படைகளால் சுடப்பட்டனர். இன்று கைது செய்யப்படுகின்றனர். இது ஒருபுறமிருக்க மேற்படி தென் இந்திய மீன்பிடி சார் மூலதன பெருக்கம் நமது தேசத்தில் கடல்வளத்தை அழிவுக்கு உட்படுத்துவதே அரசியல் மற்றும் ஊடகம் சார்ந்து பேசப்படா பொருளாகவுள்ளது.

கடலில் உருவாகும் மீன்வளத்தின் அடிப்படையில் கிடைக்கவல்ல வருமானத்திற்கு மீறியதான மீன்பிடித்திறனை அதிகரிக்க முதலீடுசெய்வதும், அதைக் கட்டுப்படுத்தி மீன்வளத்திற்கேற்ப முதலீடு செய்ய வகைசெய்யாமல், மீன்பிடித்துறையில் தாராளமய முதலீட்டை ஒரு அரசு தனது கொள்கையாக கொண்டிருக்குமானால் அதனால் முதலில் பாதிப்படைவதும், அழிவுக்குள்ளாவதும் கடல்சார் வளங்களே.

உற்பத்தி உபகரணங்களில் முதலீடு செய்யும்போது, அதை இலாபத்துடன் திருப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை முதலீட்டாளருக்குண்டு. ஆனால் மீன்பிடித்தொழில், ஒரு தொழிற்சாலையில் இயந்திரங்களையும், மனிதரின் உழைப்பையும் அடிப்படையாகக் கொண்டு மூலதனத்தை- அதன் லாபத்தை உயர்த்துவது போலல்ல. மீன்வளம் இயற்கை சார்ந்தது. ஒரு தொழிற்சாலையில் இயந்திரத்தை வைத்து உற்பத்தியை கூட்டவோ அல்லது குறைக்கவோ முடியும். சந்தை நிலவரத்திற்கேற்ப உற்பத்தியைக் கட்டுப்படுத்த முடியும்.



ஆனால் மீன்வளம் அப்படி அல்ல. மீன்வளத்தின் உருவாக்கம் பல ஆண்டுகளைக் கொண்ட இயற்கைசார் உற்பத்திப் பொருள். மீன்வளத்தின் உருவாக்கம் கடலின் ஆழம், அதன் அடித்தளத் தாவரவியல், கடலின் புவிசார் அமைப்பு, கடலின் நீரோட்டம், மற்றும் கடலின் வெப்ப தட்ப நிலையில் தங்கியுள்ளது. இதன் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட அளவு கடற்பரப்பில் மேற்கூறிய மீன்வளர்ச்சிக்கான சூழலியல் காரணிகள் மீன் வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்கும் போது ஒரு குறிப்பிட்ட அளவு மீன்கள் தான் உருவாகும். மீன்வளர்ச்சிக்கான சூழலியல் காரணிகள் சில வருடங்களில் மிக மிக சாதகமானதாகவுள்ள போது அடிப்படை உற்பத்தி அளவிலிருந்து 00,2 00,5 சதவீதத்துக்கு கூடுதலாக உருவாகலாம். ஆனால் இந்த காரணிகளில் ஏதாவது ஒன்று பாதகமானதாக அமையும்போது மீன் வளர்ச்சியின் அளவு 10 சதவீதத்தில் இருந்து 90 சதவீதம் வரை வீழ்ச்சியடையலாம்.




இதனடிப்படையில், இயற்கையுடன் இணைந்து அதற்கு பங்கமேற்படாது மீன்பிடித்தொழில் செய்வதானது, மீன்வளர்ச்சிக்கான மேற்கூறிய சூழலியல் காரணிகளை பாதிக்காமலும், மீன்வளத்தில் கூடியது மூன்றில் இரண்டு பங்கை மட்டும் பிடிப்பதுவாகும். அதேவேளை குறைந்தது மீன்வளத்தில் மூன்றில் ஒன்று பங்காவது இருந்தால் தான் அதன் மறுஉற்பத்திக்கு வசதியாகவிருக்கும்.



அத்துடன் அந்த மீன்களில் குறைந்தது 75 சதவீதம் மீன்கள் மறுஉற்பத்திக்கு தயாராகவுள்ள பெண் மீன்களாகவும் இருக்கவேண்டும். அதாவது இனப்பெருக்கத்தை செய்யக் கூடியனவாக, முட்டையிடக் கூடியனவாக இருக்க வேண்டுமென கடல்வள ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஆனால் கொள்ளை இலாபத்தை மட்டுமே குறியாகக் கொண்டியங்கும் போது, இருக்கின்ற மீன்வளம் அனைத்தையும் தமதாக்கி கொள்ளும் போட்டி எழும். அதற்காக மீன்களை கடலிலிருந்து பெயர்த்தெடுக்கும் பாரிய உற்பத்தி உபகரணங்களை, முதலாளிகள் பெரும்முதலீட்டில் வாங்கிக் குவித்து, மீன்பிடியின் அளவை அதிகரிக்கும் போட்டி அவர்களிடையே வளர்ந்து கொண்டு போகும். ஆனால் அதேவேகத்தில் மீன்வகைளின் மறுஉற்பத்தி நடைபெறாது. அது மேற்கூறியது போல மனிதனால் கட்டுப்படுத்த முடியாத, கடற்சூழல் மற்றும் தட்ப வெட்பக் காரணிகள் பலவற்றில் தங்கியிருக்கின்றது. அதனால் மீன்களின் மறுஉற்பத்திக்கு அதி அத்தியாவசியமான சினைப்படும் திறனுடைய மீன்கள் இவ்வகைக் கட்டுப்பாடற்ற நாசகார மீன்பிடியால் அருகிவிடும். இதனால் மீன் வகைகளின் மறுஉற்பத்தி படுபாதாள வேகத்தில் குறையும். இறுதியில் மீன்கள் கடலில் முற்றாக அருகி, மீன்வளம் இல்லாத கருங்கடல்களாக அவை மாறிவிடும்.



மெதுமெதுவாக தண்ணீர் ஊறும் கிணற்றில் இராட்சத நீரிறைக்கும் இயந்திரம் வைத்து அடியொற்ற தண்ணீரை உறுஞ்சுவதற்கு இதனை ஒப்பிட்டு நோக்கினால், மீன்களின்

**(தொடர்ச்சி 15ம் பக்கத்தில்)**

# சிலி - பாசிஸ அரசியலுக்கு எதிரான போராட்டத்தின் 40 வது வருடம்

எம்மிற் பலருக்கு 11 செப்டெம்பர் என்றால் நினைவில் வருவது 11 செப்டெம்பர் 2001 அன்று அல்கையிடா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், உலக முதலாளித்துவத்தினதும், அமெரிக்கப் பொருளாதார ஏகாதிபத்தியத்தினதும் குறியீடாகவிருந்த வோர்ல்ட் ரேட் சென்டர்(World trade center) மற்றும் அமெரிக்கப் பாதுகாப்பு நிறுவனமான பென்ரகோன் (Pentagon) மீதும் விமானத்தைச் செலுத்தி அவற்றை தகர்த்தது தான். இத்தாக்குதலில் பென்ரகோன்( Pentagon) மிகக் குறைந்த பாதிப்புடன் தப்பியது. ஆனால் வேர்ல்ட் இரெட் சென்ட்ர் (World Trade Centre)) முற்றாக அழிந்தது. இந்நடவடிக்கையில் மொத்தமாக 2986 பேர் உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

ஆனால் இதைவிட பலமடங்கு அழிவு 40 வருடங்களுக்கு முன், 11 செப்டெம்பர் 1973 இல் அமெரிக்க அரசின் ஜனாதிபதியாக இருந்த நிக்ஸனின் தலைமையில் அவரது அரசின் பாதுகாப்பு செயலாளராகவிருந்த ஹென்றிக் கிஸ்ஸிங்கரால் சிலி நாட்டில் ஏற்படுத்தப்பட்டது.

சிலியின் துன்பியல் நாடகம்

காலை ஏழு மணி 11 செப்டம்பர் 1973. ஜனாதிபதி சால்வடோர் அயண்ட (Allende) முப்படைகள் ஆட்சிக்கவிழ்ப்பை மேற்கொள்ள, தலைநகர் சாண்டியாகோ டி சிலி நோக்கி செல்கிறது என்ற தொலைபேசித் தகவலைக் கேட்டு விழித்துக் கொள்கிறார். அவர் தனக்கு விசுவாசமான தனது சுய பாதுகாப்பு படைகளின் உதவியுடன், ஜனாதிபதி மாளிகை லா ஆழநெனய வுக்கு செல்கிறார். அங்கு அவருக்கு சிலியின் அரசியல் - பாதுகாப்பு நிலைமை பற்றி ஊழியர்களால் விளக்கமளிக்கப்படுகிறது. அத்துடன், இராணுவ தலைமையால் அனுப்பப்பட்ட தகவலும் அவருக்கு தெரிவிக்கப்படுகிறது. அத் தகவலின் உள்ளடக்கமானது, முப்படைகளும், அவரது அரசுக்கு எதிராக ஒரு இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு மேற்கொள்ளும் முயற்சியின் முதல் அங்கமாக தலைநகரை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததுடன், ஜனாதிபதி சால்வடோர் அயண்ட (Allende) உடனடியாக எந்தவித கோரிக்கையும் வைக்காமல் உடனடியாக ராஜினாமா செய்யவேண்டும் என்றும், இதற்கு மறுத்தால் ஜனாதிபதி மாளிகைக்கு குண்டு வீசித் தகர்க்கப்படும் என்ற கட்டளையாகும்.

தனது சுய பாதுகாப்பிற்கான சில பத்து படையினரைத் தவிர எதுவும் தனது பக்கம் இல்லை என்பதை உணர்ந்த ஜனாதிபதி சால்வடோர் அயண்ட, மக்களிடம் உதவி கோரும் நோக்கில், வானொலியில் உரை ஒன்றை நேரடியாக ஆற்றுகிறார். அதில் தனது நிலைமையை விளக்கி, இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிராக மக்களையும், தொழிலாளர்களையும் வீதியில் இறங்கிப் போராடுமாறு அழைப்பு விடுத்ததுடன், தான் எவ்வித காரணம் கொண்டும் பாசிசத்துக்குப் பயந்து மக்களால் தெரிவு செய்யப்பட்ட தனது அரசைக் கலைக்கப் போவதுமில்லை, தான் பதவியை விட்டு விலகவும் மாட்டேன் என அறைகூவல் விடுத்தார். அவரது வானொலி உரை பாரிய வெடிப்பு சத்தத்துடன் நிறைவடையாமல் - முடிவிற்கு வருகிறது.

ஜனாதிபதி அயண்டே தனது பாதுகாப்புப் படைக்கு விட்டுக் கொடுக்காது போராடுமாறு பணித்ததுடன், தனக்கு கியூபா தலைவர் ஃபிடல் காஸ்ட்ரோ அன்பளிப்பாக வழங்கிய ஏ.கே 47 இனை எடுத்து அதைத் தயார் நிலைப்படுதியபடி, பாதுகாப்புக்காக ஒரு இரும்பு ஹெல்மெட் தலைக்கவசத்தை அணிந்து கொள்கிறார். முப்படையைச் சேர்ந்த சில ஆயிரம் வீரர்கள் ஆட்சிக் கவிழ்ப்பை தலைமை தாங்கிய ஜெனரல் ஆகுஸ்டோ பினோச்சேயின் பணிப்புக்கிணங்க ஜனாதிபதி மாளிகையை சுற்றி வளைக்கின்றனர். வெடிச்சத்தமும், புகை மண்டலமும் வானை முட்டுகின்றது. வெடி அதிர்வில் உடைக்கப்பட்ட ஜன்னல்கள் ஊடாக கண்ணீர் புகைக்குண்டுகளும், எறிகணைகளும் ஜனாதிபதி மாளிகைக்குள் ஏவப்படுகிறது. ஜனாதிபதி சால்வடோர் அயண்ட காயமடைகிறார். மாளிகையின் பாதுகாப்பான பகுதிக்கு அவரை கொண்டு செல்கின்றனர் அவரது பணியாளர். அது நடந்து சில நிமிடங்களில் சரமாரியான தானியங்கித் துப்பாக்கிகளின் ஒலி கேட்கின்றது. அதன் பின் வந்த சில நிமிடதுளிகளில், தலையில் சுடப்பட்ட நிலையில் தோழர் ஃபிடல் காஸ்ட்ரோ அன்பளிப்பாக வழங்கிய ஏ.கே 47 அருகில் இருக்க ஜனாதிபதி சால்வடோர் அயண்ட இன் உயிரற்ற உடல் இரத்த வெள்ளத்தில் கிடக்கிறது. அவரின் உதவியாளர்கள், பாதுகாப்பு படையினர் என அனைவரும் கொல்லப்படுகின்றனர். பாராளுமன்றம் கலைக்கப்பட்டு ஜெனரல் ஆகுஸ்டோ பினோச்சே இராணுவ ஆட்சியை






பிரகடனப்படுத்துகிறார். பின்வந்த நாட்களில் பல பத்தாயிரம் பேர் கைது செய்யப்படுகின்றனர். இடதுசாரிகள், மக்கள் அமைப்பு தலைவர்கள், மாணவ - பெண்கள் - உழைப்பாளர் சங்கங்களின் தலைமைகள் கொலை செய்யப்படுகின்றனர். மிக முக்கிய தலைவர்கள் உயிருடன் பிடிக்கப்பட்டு, கை - கால் விலங்கிட்டு விமானங்கள் மூலம் உயிருடன் ஆழ்கடலில் வீசப்பட்டனர். பெண் தோழர்கள் கைது செய்யபட்டு இராணுவ பாலியல் வதைக்கு உள்ளாக்கப் படுகின்றனர்.

ஜனாதிபதி சால்வடோர் அயண்ட இறந்த செய்தி கேள்விப்பட்ட உலகத்தின் மகா காதல் கவியும், கம்யூனிசப் போராளியுமான பாப்லோ நெருடா அதிர்ச்சியால் இருதயம் நின்று இயற்கை எய்தினார். சிலியின் ஒடுக்கப்பட்ட மக்கள் கவிஞன் - பாடகன் விக்டர் யாரா (VICTOR JARA) 16 செப்டம்பர் 1973 அன்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவ்வாறு, அமெரிக்காவால் திரைக்கதை எழுதப்பட்ட- அதன் பாதுகாப்பு செயலாளரால் இயக்கப்பட்ட, சிலியின் துன்பியல் நாடகம் -ஜெனரல் ஆகுஸ்டோ பினோச்சேயின் இராணுவ பாசிச சர்வாதிகார ஆட்சி 11. செப்டெம்பர் 1973 அன்று அரங்கேறியது.

அமெரிக்கச் சதியும் தாராள மயமாக்கலும்

1933 இல் ஆரம்பிக்கப்பட்ட சிலி சோசலிசக் கட்சியின் பிரதிநிதியாக சால்வடோர் அயண்ட ஜனாதிபதி தேர்தலில் 24. ஒக்டோபர் 1970 அன்று வென்றதிலிருந்து, அமெரிக்கா சிலியின் உள்நாட்டு அரசியலை உன்னிப்பாக கவனித்து வந்தது. கியூபாப் புரட்சியின் பின் தனது பிற்கோடியில் மீண்டுமொரு சோசலிச அரசு அமைவதை அது பாதுகாப்பு காரணங்களால் விரும்பாமையும், அப்படி ஒரு சோசலிச அரசு தென் அமெரிக்காவில் பதவிக்கு வந்தால் தனது ஏகாதிபத்திய பொருளாதார நலன் ஈடாட்டம் காணும் என்ற பயமுமே அமெரிக்காவின் கவனிப்புக்கு காரணமாக இருந்தது. இதன் அடிப்படையில் சிலியில் ஆட்சிக்கு வந்த சோசலிச ஜனாதிபதி அயண்ட உள்நாட்டு பொருளாதார கொள்கைகளை மாற்றுவதன் மூலம் தனது பொருளாதார சுரண்டலுக்கு சாவு மணியடிக்கப்படலாம் எனப் பயந்தது. 1970 களில் சிலியின் பொருளாதராம் அமெரிக்க நிறுவனங்கள், மற்றும் அதன் கடன் வழங்கு திட்டங்கள் மற்றும் ஏற்றுமதியிலேயே தங்கியிருந்தது. சிலியின் பிரதான ஏற்றுமதிப் பொருளான செம்புத்தாதுகளை அகழும் சுரங்கங்களை அமெரிக்க நிறுவனங்களே உரிமை கொண்டாடின.

இந்நிலையில் அமெரிக்கா பயந்தது போல, அயண்ட தலைமையிலான சோசலிசக் கட்சியின் அரசு பதவிக்கு வந்த சில மாதங்களிலேயே அனைத்துச் சுரங்கங்கள் உட்பட்ட அனைத்து பொருளாதார வளங்களையும் தேசிய மயப்படுத்தியது. அமெரிக்க நிறுவனங்களின் ஏற்றுமதி அனுமதிகள் இரத்து செய்யப்பட்டது. சர்வதேச சந்தை சார்ந்த விலையில் அமெரிக்காவுக்கான ஏற்றுமதி நிகழ வேண்டுமென அரசு முடிவெடுத்தது.

இம்முடிவுகளின் பின்னணியிலேயே சோ‘லிச கட்சியின் அயண்ட தலைமையிலான அரசை இல்லாதொழிப்பதற்கான, திட்டத்தை றிச்சர்ட் நிக்சன் தலைமையிலான அமெரிக்க அரசு உருவாக்கி, அதை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை பாதுகாப்பு செயலாளர் ஹென்றிக் கிஸ்சிங்கர் இடம் ஒப்படைத்தது. ஹென்றிக் கிஸ்சிங்கர் CIA யின் உதவியுடன் நடைமுறைப்படுத்தினார் .

முதலில் சிலியின் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் வேலையில் ஈடுபட்டதுடன், சிலியில் உள்ள தமது நேச சக்திகள் மற்றும் ஊடகங்கள் மூலம் அயண்ட அரசுக்கு எதிராக பாரிய பிரச்சாரங்களை முன்னெடுத்தது CIA. இதை முன்பே எதிர்பார்த்த அயண்ட அரசு சீனா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் உதவியுடன் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டது.

1973 வரை பல வழிகளிலும் முயற்சித்தும் அயண்ட அரசைக் கவிழ்க்க முடியாத அமெரிக்க ஏகாதிபத்தியம், சிலியின் வலதுசாரிகள் மற்றும் இராணுவ தலைமைகளை விலைக்கு வாங்கி ஆட்சிக் கவிழ்ப்பை நடத்த திட்டமிட்டது. அத்திட்டத்தின் கையாளாக செயற்பட்டவரே, ஜெனரல் ஆகுஸ்டோ பினோச்சேயும் சிலியின் இராணுவ தலைமையும். அமெரிக்க சதியின் உதவியுடன் பதவிக்கு வந்த ஜெனரல் ஆகுஸ்டோ பினோச்சே, அமெரிக்க ஆலோசனைக்கு ஏற்ப சிலியின் பொருளாதாரத்தை, திறந்த சந்தைப் பொருளாதாரமாக மாற்றினார். இன்று நவதாராளமய பொருளாதாரக் கொள்கை எனக் கூறப்படும் பொருளாதார முறையை உலகில் முதலில் நிறுவனமயப்படுத்தியது ஜெனரல் ஆகுஸ்டோ பினோச்சேயின் சர்வாதிகார பாசிச அரசு. பழையபடி அமெரிக்க நிறுவனங்கள் சிலியின் வளங்களை உரிமை கொண்டாடுவதற்கான உரிமங்கள் வழங்கப்பட்டது. அத்துடன் சமூகத்தின் அனைத்து நிறுவனங்களும் தனியார் மயப்படுத்தப்பட்டு சர்வதேச நிறுவனங்கள், கல்வி, சுகாதாரம் போன்ற அத்தியாவசிய சேவைகளிலும் ஈடுபட்டு பணம் சம்பாதிக்க சட்டம் இயற்றப்பட்டது.

ஜெனரல் ஆகுஸ்டோ பினோச்சேயின் அமெரிக்க அடிவருடிக் கொலைகார-பயங்கரவாதப் பாசிசஅரசு 11 பங்குனி 1990 வரை சிலியை ஆட்சி செய்தது. இக்காலத்தில் 30000 பேர் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டனர், அல்லது காணாமற் போயினர் என நடுநிலையாளர் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், அமெரிக்க சார்பு ஆய்வுகளின் படி 3000 பேர் மட்டுமே கொலை செய்யப்பட்டதாகக்

**(தொடர்ச்சி 15ம் பக்கத்தில்)**



## வடக்கு தேர்தல் (4ம் பக்க தொடர்ச்சி )

இந்த வகையில் தேர்தல் முடிவுகள், மக்களின் சுதந்திரமான ஜனநாயகமான சொந்தத் தெரிவு அல்ல. மாறாக திணிக்கப்பட்ட பாசிசத்தின் எல்லைக்குள், வாக்குப் போட வைக்கப்பட்டனர். ஜனாதிபதி கூறியது போலவும், கூட்டமைப்புக் காட்டுவது போலவும், மக்களின் சுதந்திரமான ஜனநாயகத் தெரிவு அல்ல இந்தத் தெரிவு.

சந்தர்ப்பவாத பிழைப்புவாத அரசியல் வக்கிரங்கள்

இனரீதியான பிரதிநிதித்துவம் கிடைத்தால், அதுவே மக்களின் வெற்றி என்று கூறுமளவுக்கு அரசியலும், ஆய்வுகளும் முன்தள்ளப்படுகின்றது. இந்த இனப் பிரநிதித்துவம் என்பது இயல்பாகவே மக்கள் சார்ந்த கொள்கைகளையும், கோட்பாடுகளையும் நிராகரிக்கின்றது. இன அடையாளத்தை முன்னிறுத்தி மக்கள் அரசியலை நிராகரிக்கின்றது.

மாற்று இனத்தை சேர்ந்தவரை நிராகரிக்கும் இந்த இனவாதம், தேர்ந்தெடுப்பதை மட்டுமல்ல பரந்துபட்ட மாற்றின மக்களையே பொது எதிரியாக முன்னிறுத்துகின்றது. இனரீதியான பிரதிநிதித்துவமும், இனரீதியான அரசியலும், தொடர்ந்து மக்களை ஒடுக்கவே உதவுகின்றது.

தமிழினவாதிகளும் நவதாராளமயமாதலும்

இனவாதமும், நவதாராளமயமாதலும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். இனவாதிகளான கூட்டமைப்பின் வெற்றி என்பது, முந்தைய வெற்றிகளில் இருந்து பண்புரீதியாகவும் அளவுரீதியாகவும் வேறுபாடு கொண்டது. அரசு செய்த நவதாராளமயமாதலை, வடக்கில் இனித் தானே முன்னெடுக்கும் புதிய அரசியல் பரிணாமத்தைப் பெற்று இருக்கின்றது.

இனி நவதாராளமயமாதற் பொருளாதாரத்தை, தமிழனின் அபிவிருத்தியாகக் காட்டி, தமிழ் மக்களை அன்னியன் சூறையாடுவதற்கான அடித்தளத்தை இந்தத் தேர்தல் வெற்றி தொடங்கி வைத்திருக்கின்றது. இதுவரை காலமும் அரசு செய்து வந்த "மாமா" வேலையை, கூட்டமைப்பு கையேற்று இருக்கின்றது. இதற்கு ஏற்ப இனவாதம், அரசியல்ரீதியான மேலும் பண்பு மாற்றம் பெறவுள்ளது.

அரசின் இனவொடுக்குமுறைக்கு எதிராக கடந்த 75 வருடத்துக்கு மேலாக எந்த இனவாத அரசியலையும், நடைமுறையையும் கொண்டிருந்தனரோ, அதையே மீளவும் முன் தள்ளியவர்களே வெற்றி பெற்றனர். கடந்த காலத்தில் அரசியல்ரீதியாக தோற்றுப் போன அதே பாதையைக் கொண்டு, மீண்டும் மக்களை ஏமாற்றினர். மக்களுக்கோ வேறுவழி இருக்கவில்லை.

போலிச் சுதந்திரம் பெற்ற காலம் தொடங்கி, தமிழ் மக்களை பேரினவாதத்துக்கும் இனவாதத்துக்கும் எதிராக அணிதிரட்ட முடியாதவர்கள் தான் இவர்கள். இனரீதியான தங்கள் இனவாதத்தின் பின் மக்களை பிளந்ததன் மூலம், தம் பின்னால் அணிதிரள வைத்தனர். அரசு விதைக்கும் அதே இனவாதத்தையே தங்கள் அரசியலாக முன்வைத்து, மக்களை இனவாதத்தில் இருந்து மீளமுடியாத வண்ணம் மீண்டும் "குண்டுச் சட்டிக்குள் குதிரையை" ஓட்ட முனைகின்றனர்.

இதன் மூலம் இனரீதியாக தமிழ் மக்களின் வாக்குகளை அறுவடை செய்தவர்கள், கடந்த காலம் போல் எந்தத் தீர்வையும் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப் போவது கிடையாது. மாறாக ஆளும் வர்க்க சமரசங்கள் மூலம், தமிழ் மக்களை சுரண்டும் உரிமையை பகிர்ந்து கொள்ள முனைகின்றனர். இதையே அரசியல் தீர்வாக கோரினர்.

ஆனால் கடந்த இந்தச் சூழல், இந்தத் தேர்தல் வெற்றி மூலம் மாறியிருக்கின்றது. வடக்கில் அபிவிருத்தியின் பெயரில் அரசு முன்னெடுத்த நவதாராளமயமாதல் மூலம் இந்தியாவின் அதிகரித்த நலன்களை, இனி கூட்டமைப்பு மூலம் இந்தியா முன்னெடுக்க உள்ளது. இந்த சூழல் புதிய பரிமாணமாகின்றது. இதற்கான அரசியல் சமிக்ஞைகளையே இந்தியாவின் ஆளும் வர்க்கம், கூட்டமைப்பின் தேர்தல் வெற்றி பற்றிய கூற்றுகள் மூலம் பறைசாற்றி வருகின்றது. ஆக இனி இந்திய நலன்களை அபிவிருத்தியாகக் காட்டி, கூட்டமைப்பும் மக்களுக்கு எதிராகப் பிழைத்துக் கொள்ளும் காலம் தேர்தல் வெற்றி மூலம் தொடங்கி இருக்கின்றது.

அன்று போராட்டத்துக்கு உதவியதின் பெயரில் இந்தியா செய்த அதே வேலையை, வடக்கில் நேரடியாகவே அபிவிருத்தியின் பெயரில் செய்யவுள்ளது. மூலதனம் தான், உலகில் சர்வ வல்லமை பொருந்தியது. மூலதனத்துக்கு மகிந்த முன்னெடுத்த அபிவிருத்தி அரசியலை முன்னெடுக்க, இந்தத் தேர்தல் வெற்றி மூலம் கூட்டமைப்பு களமிறங்கி இருக்கின்றது.

இதற்கு மாற்று என்ன?

இனவொடுக்குமுறைக்கு எதிராக, இனரீதியாக சிந்திப்பதல்ல. இது தீர்வைத் தரப்போவதில்லை. அதேபோல் நவதாராளமயமாதல் மூலமான அபிவிருத்தி மக்களுக்கானது அல்ல. இரண்டும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள்.

இரண்டையும் ஒருங்கே முறியடிப்பது அவசியம். அரசின் இனவொடுக்குமுறையிலான அபிவிருத்தி அரசியலும், கூட்டமைப்பின் இனவாத நவதாராளமயமாதல் அரசியலும் மக்களுக்கு எதிரானது. தேர்தல் முடிவு மூலம் கூட்டமைப்பு அரசின் நவதாராளமயமாதல் செயற்பாட்டை, தனது செயலுக்குரியதாக்கி நிற்கின்றது. இதனால் மக்களை அபிவிருத்தியின் பெயரில் கருவறுக்க, இனவாதம் முக்கியமான அவசியமான தொடர் அரசியல் கூறாக கூட்டமைப்புக்குத் தேவைப்படுகின்றது. இனத் தீர்வை மறுக்கும் ஒரு அரசியல் கூறாகவும் மாறியிருக்கின்றது. இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மறுக்கும் அரசின் அதே நிலைக்கு, கூட்டமைப்பின் நவதாராளமயமாதல் பொருளாதாரக் கொள்கைத் தீர்வை மறுக்கும் இனவாத சக்தியாக அரசியல் அரங்குக்கு இந்த தேர்தல் வெற்றி மூலம் பண்பு மாற்றம் பெற்றுள்ளது.

முன்பு அரசியல் தீர்வுமூலம் நவதாராளமயமாதல் முன்னெடுக்கும் முந்தைய கோரிக்கைக்குப் பதில், இன்று நவதாராளமயமாதல் பொருளாதாரத்தை முன்னெடுப்பதன் மூலம் தீர்வை மறுக்கும் சக்தியாக கூட்டமைப்பு மாறியிருக்கின்றது. இதற்கு பொலிஸ், காணி அதிகாரத்தைக் கோருகின்றது. மூலதனத்தின் நலனை பாதுகாக்க இது தேவை என்கின்றது. இதுதான் இன்றைய புதிய அரசியல் எதார்த்தம். இந்த புதிய அரசியல் சூழலை எதிர்கொண்டு முறியடிப்பது, மக்களின் முன்னான சவால் மிக்க அரசியலாக மாறி இருக்கின்றது.

## வடக்கின் மக்கள் உரிமைக்காக (1ம் பக்க தொடர்ச்சி )

நவ தாராளமாய முதலாளித்துவமும், இனவாதமும் ஆகிய இரண்டினதும் கலவையுடனான பிற்போக்குப பாதையில் பயணிக்கும் ராஜபக்' சர்வாதிகாரத்திற்கு எதிர்ப்பு காட்டிய தமிழ் தேசிய கூட்டமைப்பு வேறோரு அடையாளத்தோடு அதே அழிவுப் பாதையிலேயே பயணிப்பதாக சம உரிமை இயக்கம் மேலும் குறிப்பிடுகிறது. தமிழ் மேட்டுக்குடி கனவான்களுக்குத் தேவைப்படுவது ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உரிமைகளை பெற்றுக் கொடுப்பதல்ல, நவ தாராளமய முதலாளித்துவ மூலதனத்திற்கு வடக்கில் நுழைவதற்காக வழிசமைத்துக் கொடுத்து, தமது பங்கை பெற்றுக் கொள்வதற்காக முதலாளித்துவ அரசாங்கத்தோடு இணக்கப்பாட்டுக்கு வருவதேயாகும். இந்த நிலைமையின் கீழ் வடக்கின் ஒடுக்கப்பட்ட மக்களை வலுப்பெறச் செய்யும் மற்றும் வடக்கிலும் தெற்கிலுமுள்ள ஒடுக்கப்பட்ட ஒரே போராட்டத்திற்குள் இணைத்து ஒற்றுமைப் படுத்தும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும், வடக்கு மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை பெற்றுக் கொடுப்பதற்கான போரட்டத்தை துரிதமாக முன்னெடுக்கப்போவதாகவும் ரவீந்திர முதலிகே மேலும் குறிப்பிட்டார்.

## சிரிப்பு-கண்ணீர் (3ம் பக்க தொடர்ச்சி )

எடுத்துக் கொண்டால் இதுகூட நவ தாராளமய முதலாளித்துவத்தோடு கைகோர்த்துக் கொண்ட அரசியலாகும். இவ்வாறான அரசியல் வடக்கில் இருப்பது அரசாங்கத்திற்கு நன்மை பயக்கக் கூடியதாகவே இருக்கும்.

வடக்குத் தேர்தலின் ஊடாக ஜனநாயகம் தொடர்பில் வெளிநாட்டு அழுத்தங்களிலிருந்து தப்பிக்க அரசாங்கத்திற்கு வழி கிடைக்கக்கூடும். வடக்கில் அடக்குமுறை கிடையாதெனவும், அங்கு சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலொன்று நடந்ததாகவும் உறுதி செய்து வெளிநாட்டு அழுத்தத்திலிருந்து மீள்வதற்கான தீர்வைத் தேடமுடியும். வடமாகாண சபைத் தேர்தலில் வடக்கு மக்கள்மீது தனது ஆதிக்கத்தைச் செலுத்துவதை நோக்கமாகக் கொண்டு அரசாங்கம் செயற்பட்டதே அன்றி, வடக்கு மாகாண சபையை வெல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் போட்டியிடவில்லை. அரசாங்கத்தின் நோக்கம் வென்றுள்ளது. அதனால் தான் நீண்டகால வெற்றியொன்று இருப்பதாக அரசாங்க அமைச்சர்கள் கூறுகின்றனர். தமிழ் இனவாத அரசியல் வலுப்பெறுவது அரசாங்கத்திற்கு பிரச்சினையாக இருக்காது. அதற்காக மாற்று இனவாதமொன்றை பராமரித்து முன்னெடுத்துச் செல்ல முடியும். எந்தவித இனவாதமாக இருந்தாலும், நவ தாராளமயத்தோடு கைகோர்த்துக் கொண்டாலும் கூட அதற்குத் தடையாக இருக்கக் கூடாது. வடக்கென்றும் கிழக்கென்றும் பாராமல் அப்படியான இனவாதமொன்றுதான் நிலை நாட்டப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தல் முடிவுகளைப் பார்க்கும்போது இலங்கைச் சமூகத்தில் உறுதி செய்யப்படும் அரசியலின் தன்மை குறித்து அறிந்துகொள்ள முடியும். இது நவ தாராளமயத்தினதும் பிற்போக்குத்தனத்தினதும் அடையாளமாகும். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் இனவாதமும், வடக்கின் இனவாதமும் வெற்றி பெற்றுள்ளமை குறித்து அழுதுவடிவதால் எவ்வித பலனும் கிடைக்கப்போவதில்லை. ஹெல உருமய, தேசிய சுதந்திர முன்னணி போன்ற கட்சிகள் படுதோல்வியடைந்தமை குறித்து குதூகலிக்க வேண்டியதில்லை. அதற்குப் பதிலாக இவற்றைப் புரிந்துகொண்டு இவற்றுக்கு எதிராகப் போராடவேண்டும். நடக்கும் சம்பவங்களெல்லாம் அழுவதற்காகவோ சிரிப்பதற்காகவோ அல்ல. செயற்படுவதற்கு. கஸ்டமானதும், விரிவானதுமான நீண்டகால நடவடிக்கையின் மூலமே இந்த அழிவிலிருந்து மீள முடியும். இடதுசாரியத்தால் மட்டுமே இதனைச் செய்யமுடியும். ஆகவே இடதுசாரியத்தை வலுப்பெறச் செய்வதன் மூலமே இந்தச் சவால்களை வெற்றிகொள்ள முடியும். இடசாரியத்திற்கான பாதை திறந்திருப்பதாகத்தான் தேர்தல் முடிவுகளும் கூறுகின்றன. இது இடதுசாரியத்திற்காக பாரிய இடைவெளியொன்று இருக்கிறதென்ற அர்த்தத்தோடல்ல. ஒட்டுமொத்த நாகரிகத்தினதும் தோல்வி வரை இழுத்துக் செல்லக்கூடிய இந்தக் கொடுமையைத் தோற்கடிப்பதற்கான தேவை இருக்கின்றது என்ற அர்த்தத்திலேயேயாகும். ஆகவே சிரிப்பதற்கும் அழுவதற்கும் பதிலாக செயற்படுவதற்காக உறுதி பூணுவோம்.

## அறிவு என்பது என்ன? (5ம் பக்க தொடர்ச்சி )

பொருளின் விசேட குணாம்சத்தை தீர்மானிக்கின்றது என்பதை கண்டுபிடிப்பதன் மூலம், அந்தப் பொருளில் உள்ள மனிதனின் பொது அறிவை மறுத்து தனியுடமை ஆக்குகின்றனர். இங்கு அறிவு மறுக்கப்படுவதே, மனித அறிவாக்கப்படுகின்றது. தனிமனிதனின் அறிவு ஒழுக்கமாக்கப்படுகின்றது. "அறிவுடமைச் சட்டம்" மனிதன் அறிவற்று வெறும் கோதாக இருப்பதை அறிவாக்குகின்றது. அறிவை மனிதன் பொதுவில் தனதாக்குவது சட்டவிரோதமானதாக, குற்றமாக்கப்படுகின்றது. மனித அறிவையும், மனித உழைப்பிலான கருவிகள் மூலம் திருடி, மனிதனுக்கு எதிராக தாமே இயற்றிய தனியுடமைச் சட்டங்கள் மூலம் தனியுடமையாக்குகின்றனர். தாங்கள் திருடியதை சட்டப்படி தனியுடமையாக்கி, அதனை மீறுவதை மனிதத் திருட்டாகக் காட்டுகின்றனர். மனித அறிவு தனியுடமையால் திருடப்பட்டு இருப்பதை கொண்டாடுவது அறிவாக்கப்படுகின்றது. மனித அறிவு இந்தத் திருட்டை, சட்டப்படியான தனியுடமைச் சொத்தாக நம்புவதே அறிவாக்கப்படுகின்றது.

தனியுடமையிலான அறிவுச் சொத்துடமை சட்டத்துக்கு உட்படாத, பரந்துபட்ட மக்களின் பாரம்பரிய அறிவு என்பது என்ன என்ற கேள்வி எழுகின்றது. அதை இல்லாதாக்கி அழிக்கின்ற வேலையை தனியுடமை செய்கின்றது. இங்கு அறிவு என்பது என்ன என்ற கேள்வி, இயற்கையாகவே எழுந்து விடுகின்றது. இன்றைய அறிவும், அறிவைப் பெறும் வடிவங்களும் பற்றியுமான கேள்வியாக மாறுகின்றது.

இன்றைய இந்த சமூக அமைப்பிலான மனித அறிவு கூட நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம், வர்க்கத்துக்கு வர்க்கம், மதத்துக்கு மதம், ஆணுக்கு பெண், சாதிக்கு சாதி .... கூட, பிரிந்து இருப்பது ஏன் என்ற கேள்வியும் கூட எழுகின்றது. எந்த அறிவு சரியானது என்ற கேள்வி இங்கு இயற்கையாகவே எழுகின்றது. ஒரு தனிமனிதனின் அறிவு சரியானது என்ற தனியுடமைவாத தர்க்கம் தவறானது என்பது தெளிவாகின்றது. ஒரு சமூகத்தின் கூட்டு அறிவுதான் சரியானதாக இருக்கும் என்பது இதன் மூலம் உண்மையாகின்றது. ஆக இதைப் பற்றித் தெரிந்து கொள்வது தான் இன்றைய மனிதனின் ஆரம்ப அறிவாக இருக்கமுடியும்.

## இந்தியக் கடற்கொள்ளையும் (13ம் பக்க தொடர்ச்சி )

மறுஉற்பத்தி வேகத்திலும் கூடுதலாக, அதி வேகத்தில் அவற்றை கடலிலிருந்து பிடித்து கொள்ளை இலாபம் ஒன்றே குறி என்றியங்கும் இந்தப் பெரும் பணமுதலைகள் மற்றும் சர்வதேச மூலதன நிறுவனங்கள் எவ்வாறு மீன்வளத்தை அழித்தொழிக்கின்றனர் என விளங்கிக்கொள்ளலாம்.

இந்நிலையில் இந்தியாவில் இந்தக் கடற்கொள்ளையை கட்டுப்படுத்த, இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் படகுகள் அரசுடமையாக்கப்படும் என மீன்பிடி வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். அத்துடன் கைது செய்யப்படும் மீனவர்களை துரிதமாக விடுதலை செய்ய சட்டத்தில் மாற்றம் கொண்டுவர உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். இலங்கை அரசின் கருத்துப்படி, மீனவர்கள் கூலிக்கு மட்டுமே தொழில் செய்வதாகவும், படகுகளின் உரிமையாளர்களான நிறுவனங்களே, அவர்களை நிர்பந்தித்து, இலங்கை கடல் வலயத்தில் மீன்பிடியை மேற்கொள்ள அளிதம் கொடுப்பதாகவும் கூறப்படுகிறது

கைது செய்யப்படும் மீனவர்களை துரிதமாக விடுதலை செய்ய வகை செய்வது வரவேற்கைத் தக்க விடயம் என்றாலும், நீண்டகாலப் போக்கில் கடல்சார் மூலதனத்தின் முதலீடுகளை கட்டுபடுத்துவதன் மூலம் மட்டுமே கடல் வளங்களை பாதுகாப்பதுடன், இந்திய மற்றும் இலங்கை மீனவர்களின் வாழ்க்கை அபிவிருத்திக்கு வழி செய்ய முடியும்.

## சிலி - பாசிஸ (14ம் பக்க தொடர்ச்சி )

கூறப்படுகிறது.

இலங்கை மக்களான எமக்கு கற்றுக் கொடுக்கும் பாடங்கள்

அயண்ட வுக்கும் அவரின் சோ'லிச அரசைக் கட்டமைக்கும் முயற்சிக்கும், அமெரிக்க - முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளின் சதியால் நடந்த முடிவு பாரிய விவாதத்தை சர்வதேச இடது சாரிகளிடத்தில் தோற்றுவித்தது. அவ்விவாதத்தின் கருப்பொருளாக

1.முதலாளித்துவ ஜனநாயக பாராளுமன்ற முறையினூடாக சோசலிச புரட்சியை முன்னெடுக்க முடியுமா?

2. லெனினிய கட்சி முறையை எவ்வாறு முதலாளித்துவ பாராளுமன்ற அரசியற் சூழலில் புரட்சிக்கு தக்கதாக உருவாக்குவது

3. சோசலிச புரட்சிக்கான வேலைமுறையில் ஆயுதப் போராட்டமும் பாராளுமன்றப் பாதையும் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படுவது? போன்ற கேள்விகள் இருந்தன.

தோழர் அயண்ட மற்றும் சிலி மக்களின் பாசிச தாராளமய பொருளாதார அரசியலுக்கு எதிரான போராட்ட வரலாற்றில் இலங்கை மக்களான எமக்கு கற்றுக் கொடுக்கும் பாடங்கள் பல உள்ளன. காரணம் இன்று இலங்கை அரசு ஜெனரல் ஆகுஸ்டோ பினோச்சேயின் வழியொட்டியே ஆட்சி செய்கின்றது.

**போராட்டம்**

185/2A எப்பிட்டி முல்லை வீதி,பிட்டகோட்டே தொலைபேசி/தெலைநகல்: 094-112799432
mpssrilanka@gmail.com, http://www.peoplesstruggle.com

## இடதுசாரியத்தின் வெற்றி எப்போது?

வாக்குறுதிகள், வாய்ச்சவாடல்கள் மற்றும் வன்முறைகள் கூடிய இன்னொரு தேர்தலும் முடிந்துவிட்டது. வெற்றி பெற்றது யாராக இருந்தாலும் அது நவ தாராளமய முதலாளித்துவத்தின் மக்கள் மத்தியில் மேலும் தினிப்பதற்காக அதிகார வர்க்கத்திற்கு இன்னொரு தேர்தல் வெற்றி கிடைத்திருக்கிறது. தங்களை ஏமாற்றுவதற்கு தகுதியானவர்கள் யார் என்பதை மக்களே தேர்ந்தெடுத்திருக்கின்றனர். தேர்தல் முடிந்தாலும், அது பற்றிய தேர்தல் முடிவுகளை பகுப்பாய்வு செய்பவர்களின் குரல்கள் கேட்டு இன்னமும் கேட்டுக் கொண்டிருக்கின்றன. " மக்கள் அலையொன்றை உருவாக்கி அரசாங்கத்திற்கு அதனை ஷபூமராங்' ஆக மாற்றுவோம்" என உளறிக் கொட்டியவர்கள் தேர்தல் முடிவுகளைப் பார்த்து வாய்மூடி மௌன விரதம் அனுஸ்டிக்கின்றனர். சில மாதங்களுக்கு முன்னர் மின்சார கட்டண உயர்விற்கு எதிராக பந்தமொன்றைக் கையிலேந்தி ஊர்வலம் சென்ற ஆண்களும், பெண்களும், எரிபொருள் நிவாரணம் கேட்டு போராட்டத்தில் இறங்கிய சிலாபம் மீனவர்களும் உள்ளிட்ட பெரும்பாலான மக்கள் ராஜபக்ச சர்வாதிகாரத்தை தூக்கிப் பிடிப்பதற்காக வெற்றிலை சின்னத்திற்கு முன்னால் மீண்டும் ஒருமுறை புள்ளடியிட்டு அரசாங்கத்தின் மீது தமக்குள்ள நம்பிக்கையை காட்டியுள்ளனர். சரியான இடதுசாரிய இயக்கமொன்றின் உறவைப் பெற்றிராத சமூகத்தில் இப்படியான தன்மைகள் வெளிவருவதை புரிந்து கொள்ள முடியும்.

நவ தாராளமய முதலாளித்துவத்தின் மிலேச்சத்தனமானதும் கொடூரமானதுமான நடைத்தைகளையும், அதற்கு ஒப்பாக அதன் பலிக்கடாவாக ஆக்கப்பட்டிருக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் மனோ இச்சையான நடவடிக்கைகளையும் ஒவ்வொன்றாக பிரித்து, குறுகிய தனித்துவத்திற்கு தீங்கு விளைவிக்கும் நவ தாராளமய முதலாளித்துவத்தினது மனித உறவுகளின் தன்மையையும் இணைத்தே நாங்கள் அறிந்து கொள்ள வேண்டும். ஒட்டுமொத்த மனித சமூகமும், அழிவுக்குள் மூழ்குவதற்கான உண்மையான காரணத்தை அறிந்து கொள்வதற்கு சரியான தத்துவார்த்த வழிகாட்டுதலொன்று உண்மையான இடதுசாரிய இயக்கமொன்றுக்கு தேவைப்படுகிறது. அவ்வாறான சமூகமொன்றை இழுத்து வீசப்பட்டிருக்கும் இருண்ட தலைவிதியிலிருந்து மீட்டெடுக்கும் கடமையை நிறைவேற்றும் வழக்காற்றுக்கு இடதுசாரியம் நுழைய வேண்டியது, அந்த தத்துவங்களிலிருந்து வெளியேறும் ஒளிக்கீற்றுக்களின் உதவியைக் கொண்டேயாகும்.

செப்டம்பர் கடந்து சென்றுவிட்டது. அரசாங்கத்தின் வெற்றிக் கொண்டாட்டங்கள் தொடர்ந்தும் நடந்து கொண்டிருக்கின்றன. வடக்கில் அரசாங்கத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த நவ தாராளமய கொள்கைகள் அரசாங்கத்தின் ஆசீர்வாதத்தோடு வட மாகாண முதலமைச்சரைக் கொண்டு தொடரப்படவிருக்கின்றன.

மூன்று மாகாணங்களுக்குமான தேர்தலின் வெற்றிக் கொண்டாட்டங்கள் ஒரு புறம் நடந்து கொண்டிருக்கும் நிலையில் ராஜபக்ச அரசாங்கத்தில் புதிதாக 9 பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். உலகத்திலேயே வரலாற்றுச் சாதனை படைத்த, மிகப்பெரிய அமைச்சரவையைக் கொண்ட அரசாங்கமாக மஹிந்த ராஜபக்சவின் அரசாங்கம் இருக்கிறது. இந்த களேபரங்களுக்கு மத்தியில் கல்வியை தனியார்மயமாக்கும் அரசாங்கத்தின் திட்டமொன்று அமுலுக்கு வந்துள்ளது. அதுதான், தனியார் பல்கலைக் கழகங்களை அமைப்பதற்கான அனுமதி. அதற்கான சட்டமூலும் நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கபபட்டு, அது சம்பந்தமாக அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுவிட்டது."தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்" என்பதைப் போன்று அரசாங்கம் மக்கள் பணத்தைக் கொண்டு தான்தோன்றித்தனமாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் ராஜபக்ச சர்வாதிகாரத்தின் அடாவடித்தனங்களை தட்டிக் கேட்கக் கூடிய, முதுகெலும்புள்ள சமுதாயமாக மக்கள் மாறு வேண்டும். அநீதியை தட்டிக் கேட்கக் கூடிய துணிவு மக்களுக்கு வரவேண்டும். அதற்காக உண்மையான இடதுசாரிய இயக்கத்தோடு அணி திரள வேண்டிய காலம் கனிந்துள்ளது என்பதை மக்கள் உணரும் பட்சத்தில், அது உண்மையான இடதுசாரிய இயக்கத்திற்கு மட்டுமல்ல, ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் கிடைத்த வெற்றியாக இருக்கும்.

## கல்வியை விற்பனைப் பண்டமாக்குவதற்கு எதிராக ஆர்ப்பாட்டம்











தனியார் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு அனுமதியளித்து வெளியிடப்பட்டுள்ள அதி விசேட வர்த்தமானி அறிவித்தலை உடனடியாக விலக்கிக் கொள்ளுமாறு வற்புறுத்தி பல பல்கலைக் கழங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. அந்த ஆர்ப்பாட்டங்களின் போது எடுக்கப்பட்ட படங்களை காணலாம்.

185/2a எப்பிட்டி முல்லை வீதி,பிட்டகோட்டேயில் வசிக்கும் ஜுட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்ட்ரா எட்வடைசிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.